சிறந்த சிறு கதைகள்

ஆஸ்கார் ஒயில்ட்

STAR PUBLICATIONS
KARAIKUDI
1944

சிறந்த சிறு கதைகள்

ஆஸ்கார் ஒயில்ட்

மொழிபெயர்ப்பு:

ஆ. சுப்பையா

ஸ்டார் பிரசுரம்
காரைக்குடி

FIRST EDITION APRIL 1944

STAR PUBLICATIONS
KARAIKUDI

Price Rs. 1—4—0

பதிப்புரை

உலகத்திலுள்ள பல மொழிகளிலும் ஊறிக்கிடக்கும் சிறந்த உண்மைகளை உறுதியாக மொழி பெயர்த்து, அழியாவண்ணம் நமது தாய்மொழியான இனிய தமிழில் நிலைபெற்று நிலவுமாறு செய்வதே எங்கள் ஸ்டார் பிரசுரத்தின் விசேஷ நோக்கம்.

குறைந்த செலவில், குறைந்த பக்கங்களில், அமெரிக்க நீலமணி நூல்கள் போல, நமது தமிழிலும் கொண்டுவர வேண்டுமென்ற ஆர்வமே இந்த முயற்சியில் எங்களை ஈடுபடச் செய்ததாகும்.

ஸ்டார் பிரசுரம்

முன்னுரை

ஐரிஷ் கவிஞர் ஆஸ்கார் ஒயில்ட், சிறந்த சிறு கதை ஆசிரியர்: ஒவ்வொரு கதையும் ஆழ்ந்த உண்மைகளைக் கலையாவேசத்துடன் சித்திரிக்கிறது; உலக நீதியில், சட்டமும், பொதுஜன நோக்கும், மனச்சாட்சியின் வளர்ச்சியும் போரிடுகின்றன; இதை நன்கு வாழ்க்கையில் உணர்ந்த ஒயில்ட், கதா சிருஷ்டி மூலம், உயர்ந்த நீதிகளை எடுத்துக் காட்டுகிறார்.

இந்நூலில் உள்ள மூன்று கதைகளும், கற்பனைச் சிறப்புடன் பிறந்த மும்மணிகளாகும்; ஒயில்டின் நடை, ஒரு சிறந்த ஒப்பற்ற சிருஷ்டி; இதில் விளையாடும் சொற்கள், கவிதை யுள்ளத்துடன் தோன்றி மறைகின்றன.

மொழிபெயர்ப்பாசிரியர் திரு. ஆ. சுப்பய்யா அவர்கள், மூலத்தின் ஜீவகளை மங்காமல் எளிய இனிய தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இது தமிழ் வளர்ச்சிக்கு ஒரு அரிய தொண்டாகும்.

காரைக்குடி
10—4—44

வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.

பொருளடக்கம்

'பிச்சைக்காரன்' அளித்த திருமணப் பரிசு!

ஒருவன் பணக்காரனுக இல்லாவிட்டால், அவன் அழகுடையவனுக இருப்பதால் பிரயோசனம் இல்லை; வேலையில்லாதவர்க்குக் காதல் வாழ்க்கை யேது? மோகன ரூபத்துடனிருப்பதைவிட, நிரந்தரமான வருமானத்துட னிருப்பதே மேல்—இவைதான் நவீன வாழ்க்கையின் பெரிய உண்மைகள். எனினும் ஹ்யூகி எர்ஸ்கின் இவற்றை உணரவில்லை. பாவம் ஹ்யூகி! அவனை அவ்வளவு புத்திசாலியென்ருே, அல்லது கீழ்த்தர குணமுடையவனென்ருே சொல்லமுடியாது. ஆனல் நல்ல முகவெட்டும், வசீகரத் தோற்றமும், கூரிய கண்களும் உடையவன். இவை காரணமாக, அவன் பெண்களிடையில் மட்டுமின்றி, ஆடவரிடையும் நன்கு பிரபல்ய மடைந்திருந்தான். பணம் சம்பாதிப்பது ஒன்று தவிர, வேறு எல்லாச் சிறப்புக்களும் அவனுக்கிருந்தன.

அவனுக்குத் தகப்பனார் பிதிரார்ஜிதமாக விட்டுப்போனவை பதினைந்து புத்தகங்கள் கொண்ட தீபகற்ப யுத்தச் சரித்திரமும், ஒரு அழகிய வாளுந்தான். இந்த வாளை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியின்முன்பு தொங்கவிட்டான். புத்தகத்தை அலமாரியில் வைத்து மூடினான். வயது முதிர்ந்த ஒரு அத்தை அவனுக்கு வருஷந்தோறும் இருநூறு பவுன் உதவி வந்தாள். அதைக்கொண்டே அவன் தன் வாணாளைக் கழித்துவந்தான். அவன் முயற்சிக்காத தொழிலில்லை. ஆறுமாத காலம் பங்கு மார்க்கட்டில் தன் அதிர்ஷ்டத்தைப் பரீட்சை செய்தான். காளைகளுக்கும் கரடிகளுக்கும் இடையில் ஒரு சிறிய வண்ணாத்திப் பூச்சிக்கு என்ன செய்ய முடியும்? கொஞ்ச காலம் ஒரு தேயிலை வியாபாரியாக இருந்து பார்த்தான். பெக்கோவும் ஸூச்சாங்கும் கொஞ்சநாளில் அலுப்புக்கொடுத்துவிட்டன. உலர்ந்த பழ வியாபாரமும் நீடிக்கவில்லை. பழங்கள் எல்லாம் கொஞ்சம் அதிகமாகவே உலர்ந்து போய்விட்டன! கடைசியாக, ஒரு வேலையும் இல்லாத நிலைமைக்கு வந்து விட்டான்.

இந்த லட்சணத்தில் அவன் ஒரு பெண்ணின்மீது காதல் கொண்டுவிட்டான். லாரா

மெர்ட்டன் என்பதுதான் அவன் காதலியின் பெயர் — பென்ஷன் பெற்று சுகஜீவியாக இருக்கும் ஒரு கர்னலின் மகள். லாராவுக்கு ஹ்யூகிமீது ரொம்பப் பிரியம். லண்டனி லேயே இவர்கள்தான் மிக அழகான ஜோடி; இருந்தாலும் பணம் என்ற விஷயத்தில் பூஜ்யந்தான். கர்னலுக்கும் ஹ்யூகிமீது பிரியந்தான். ஆனால், காதல் — கல்யாணம் என்ற பேச்சு அவர் காதில் விழக்கூடாது.

"தம்பி, உனக்குச் சொந்தமாகப் பதினை யிரம் பவுன் இருக்கும்பொழுது கல்யாணத் தைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம்" என்று சொல்வது வழக்கம். அவருடைய இந்த நிபந் தனை ஹ்யூகிக்கு ரொம்ப வருத்தத்தைக் கொடுக்கும்; இந்தச் சமயத்தி லெல்லாம் அவன் ஆறுதல்பெற லாராவிடமே செல் வான்.

ஒருநாள் காலை ஹாலண்ட் பார்க்கு நோக்கி ஹ்யூகி போய்க் கொண்டிருக்கும் பொழுது—அங்குதான் மெர்ட்டன் குடும்பத் தினர் வசித்து வந்தனர்—ஹ்யூகி தனது நெருங்கிய நண்பனான ஆலன் டிரெவரைப் பார்க்கச் சென்றான். டிரெவர் ஒரு சித்திரக் காரன்—சிறந்த ஓவிய நிபுணன்—நல்ல கலை ஞன். இந்தக் காலத்தில் சிறந்த கலைஞர்களைப்

பார்ப்பது ரொம்ப அபூர்வந்தான்! கொஞ்சம் முரட்டு சுபாவமுள்ளவன்; ஆனால் வர்ண பிரஷைக் கையில் எடுத்துவிட்டால், உண்மையி லேயே தான் ஒரு கைதேர்ந்த நிபுணன் என்ப தைக் காண்பித்துவிடுவான். அவனது படங் களுக்கு நல்ல கிராக்கி. ஹூயூகியின் மோகன ரூபமே இந்தக் கலைஞனைக் கவர்ந்தது என்று சொல்லத் தேவையில்லை. "ஒரு ஓவியனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய மனிதர்கள் எல்லாம் அழகு சுந்தரர்கள்தாம்—கலா சௌந்தரியம் நிறைந்த பார்வை உடையவர்கள். அவர்களைப் பற்றிப் பேசுவதே மனதுக்கு ரம்மியமாக இருக்கும். அழகு சுந்தரிகளும், சுந்தரர்களுமே உலகை ஆளுகிறார்கள்; அவர்கள்தான் ஆள வேண்டும்" என்று டிரெவர் சொல்லுவது வழக்கம். ஹூயூகியைப்பற்றி அவன் நன்கு தெரிந்துகொண்ட பிறகு அவனது அழகுத் தோற்றத்துக்காக மட்டுமின்றி, அவனது குண விசேஷங்கட்காகவும் அவனை விரும்பினான். தன் ஸ்டுடியோவுக்குள் அவன் எந்தச் சமயத் திலும் தங்குதடையின்றி நுழையவும் அனுமதி யளித்தான்.

மேற்குறித்த சந்தர்ப்பத்தில் ஹூயூகி ஸ்டுடியோவுக்குள் நுழைந்தபோது, டிரெவர் ஒரு பெரிய சித்திரத்தில் தன் கைத்திறனைக்

காட்டிக் கொண்டிருந்தான். அது ஒரு பிச்சைக் காரனுடைய படம். கடைசி வர்ணப் பூச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஸ்டுடியோ வின் ஒரு மூலையில் அந்தப் பிச்சைக்காரனே நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஞானவொளி பிரகாசித்தது. முகத்தில் சுருக்கு களும் மடிப்புகளும் வயது முதிர்ச்சியைக் காண்பித்தன. அவன் தோள்மீது கிழிசலும் கந்தலுமான முரட்டு ஆடை கிடந்து ஆடியது. அவனது கெட்டியான செருப்புகளில் பல ஒட்டுகளும் தையல்களும் காட்சியளித்தன. கரடுமுரடான கம்பின்மீது ஒரு கை ஊன்றப் பட்டிருந்தது. மற்றொரு கை, நைந்துபோன தொப்பியைத் தூக்கிப் பிடித்து, பிச்சை கேட்கும் பாவனையில் இருந்தது.

"என்ன அற்புதமான (Model) மாடல்!" என்று ஹியூகி தன் நண்பனின் கையைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே மெல்லிய குர லில் கூறினன்.

"அற்புதமான மாடல்தான்!" என்று உரக்கக் கத்தினன் டிரெவர். "இந்த மாதிரிப் பிச்சைக்காரர்களை நான் தினமும் சந்திக்க முடியாது."

"பாவம், ஏழைக் கிழவன்! என்ன பரிதா பத் தோற்றம்! ஆனல் சித்திரக்காரர்களுக்கு

இவனது முகமே திரவியந்தான்!" என்றான் ஹாயூகி.

"சந்தேகமென்ன? ஒரு பிச்சைக்காரனுடைய முகத்தில் சந்தோஷத்தின் சாயை இருக்கக் கூடாதென்று தானே எண்ணுகிறாய்?" என்று கேட்டான் டிரைவர்.

"ஒரு மாடலாக இருப்பதற்கு எவ்வளவு கூலி கிடைக்கும்?" என்று கேட்டுக்கொண்டே ஹாயூகி ஒரு ஆசனத்தில் அமர்ந்தான்.

"மணிக்கு ஒரு ஷில்லிங்!"

"உன் படத்திற்கு எவ்வளவு வாங்குகிறாய் ஆலன்?"

"இந்தப் படத்திற்கு மட்டும் இரண்டாயிரம்!"

"பவுன்களா?"

"கினீக்கள். சித்திரக்காரர், கவிகள், டாக்டர்கள் எல்லோரும் கினிக்கணக்கிலேயே வாங்குவார்கள்."

"அப்படியானால் இந்த மாடலுக்கும் ஒரு பங்கு கிடைக்க வேண்டும். நீ உழைப்பது போலத்தானே அவனும் உழைக்கின்றான்?"

"என்ன பைத்தியக்காரத்தனம்! வர்ணமும் கையுமாய் சதா முக்காலியின் சமீபம் நின்று கொண்டிருக்கும் சிரமத்தைக் கவனித்

துப் பார். கலை, உடலுழைப்புக்குச் சமமான அந்தஸ்தைப்பெறும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் நீ சும்மா பேசிக்கொண்டே இருக்கக் கூடாது. ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பேசாமலிரு."

சிறிதுநேரம் கழித்து, சட்டம் போடுபவன் வந்திருப்பதாக வேலையாள் சொன்னான். "ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன். ஓடிவிடாதே ஹூயூகி" என்று சொல்லிக்கொண்டே டிரெவர் வெளியேபோனான்.

இப்போது அந்தப் பிச்சைக்காரன், தன் பக்கத்தில் கிடந்த ஒரு பெஞ்சின்மீது உட்கார்ந்து ஓய்வெடுத்துக்கொண்டான். அவனது பரிதாப கரமான தோற்றம் ஹூயூகியின் மனத்தைக் கரைத்து விட்டது, தன்னிடம் பணம் ஏதாவது இருக்கிறதா என்று சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். ஒரு சவரனும் சில செம்புத்துட்டுகளுமே கிடந்தன. "என்னை விட இந்த ஏழைக்கிழவனுக்குத் தான் இவை மிகத்தேவை" என்று எண்ணிக்கொண்டே, பிச்சைக்காரன் இருக்குமிடத்துக்கு நடந்து சென்று அவன் கையில் அந்த ஒரு சவரனையும் மெல்ல வைத்தான்.

கிழவன் திகைத்துப்போனான், லேசான புன்முறுவல், உலர்ந்து போன அவன் உதடு

களில் பூத்தது. "ரொம்ப நன்றி ஐயா, ரொம்பவும் நன்றி" என்று சொன்னான்.

டிரெவர் திரும்பிவந்ததும் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு ஹ்யூகி வெளியே சென்றான். தான் அன்று செய்த காரியத்தைப் பற்றி அவனுக்குச் சிறிது நாணமேற்பட்டது. அன்று பகல் முழுவதும், அவன் லாராவுடன் கழித்தான். அவனது வீண்செலவுகளைப் பற்றி அவள் செல்லத்தனமாகக் கொஞ்சம் கடிந்து கொண்டாள். வேறு பணமில்லாததால் அவன் நடந்தே வீடு திரும்ப நேரிட்டது.

அன்றிரவு அவன் பாலட் கிளப்புக்குள் நுழைந்தபோது அங்கே டிரெவர் அமர்ந்திருக்கக் கண்டான். "படத்தை முழுவதும் பூர்த்தியாக்கி விட்டாயா ஆலன்?" என்று கேட்டான்.

"படம் பூர்த்தியாகி, சட்டமும் போட்டாய் விட்டதே! இன்னொரு விஷயம், உனக்கொரு வெற்றி கிடைத்து விட்டது. நீ பார்த்த அந்தக் கிழவன் உன்பேரில் ரொம்பப் பிரியம் உடையவனாக இருக்கிறான். உன்னைப்பற்றிய விவரங்களையெல்லாம் அவனுக்குச் சொல்ல வேண்டியதாகி விட்டது" என்றான் டிரெவர்.

"ஒருவேளை நான் வீட்டுக்குப் போனால் அவனைச் சந்திக்க கூடும் அல்லவா? இருந்

தாலும் நீ பேசுவது வேடிக்கைதானே ? பாவம், அந்தக் கிழவனுக்காக ஏதேனும் செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். இவ்வளவு துயரத்துடன் யாரும் இருப்பது ரொம்பவும் பயங்கரமான விஷயம், வீட்டில் பழைய துணிகள் மூட்டை மூட்டையாக இருக்கின்றன. அதில் எதையாவது அவன் வாங்கிக் கொள்வானா? அவன் உடுத்திருந்த கந்தல் தும்புதும்பாக வல்லவா விழுந்து கொண்டிருந்தது ?" என்று கேட்டான் ஹூயூகி.

"அவன் படத்திலேயே விசேஷம் அந்தக் கந்தல்தான். அதில் அவன் எம்மாதிரி அற்புதமாகக் காட்சி யளித்தான் பார்த்தாயா ? எவ்வளவு தொகை கிடைத்தாலும், நல்ல சட்டை போட்டு அவனைப் போல் எழுதச்சம்மதிக்க மாட்டேன், உனக்கு வறுமையாகக் காட்சி யளிப்பது எனக்கு சிங்காரக் காட்சியாக வல்லவா விளங்குகிறது ? இருந்தாலும், உனது நோக்கத்தை அவனிடம் சொல்கிறேன்" என்றான் டிரெவர்.

"ஆலன், இந்தச் சித்திரக்காரர்களே இருதயமற்ற கூட்டந்தான்" என்று ஹூயூகி சொன்னான்.

"ஒருகலைஞனின் இருதயம் அவன் தலைதான், மேலும் உலகத்தை அது இருக்கிற

படியே உணர்வது தான் எங்கள் வேலை; எங்களுக்குத் தெரிந்தபடி அதைச் சீர்திருத்துவதன்று எங்கள் வேலை, லாரா எப்படியிருக்கிருள்? அந்தக்கிழவனுக்கு அவள் விஷயத்தில் ரொம்ப அக்கறை யிருக்கிறது"

"அவளைப் பற்றியும் அவனிடம் சொல்லி விட்டாயா?"

"அது மட்டுமல்ல, அந்த ஈவிரக்க மற்ற கர்னலைப்பற்றியும், அவர் கேட்கும் பதினுயிரம் பவுனைப் பற்றியுங்கூடச் சொல்லியிருக்கிறேன்."

ஹா¬யூகிக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. "அந்தக் கிழட்டுப் பிச்சைக்காரனிடம் என்னுடைய அந்தரங்க விஷயங்களை யெல்லாம் சொல்லி விட்டாயல்லவா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான். டிரெவர் சிரித்துக் கொண்டே சொன்னுன்: "அப்பா, நீ சொல்லும் கிழட்டுப் பிச்சைக்காரன், ஐரோப்பாவிலேயே மிகுந்த செல்வந்தர்களில் ஒருவன் என்பதைத் தெரிந்துகொள். கடன் எதுவும் வாங்காமலே, அவன் நாளைக்கு லண்டன் நகரம் முழுவதையும் விலைக்கு வாங்கிவிட முடியுமே! ஒவ்வொரு தலை நகரிலும் அவனுக்கு ஒரு மாளிகை இருக்கிறது. தங்கத்தட்டில் தான் சாப்பிடுகிருன்!"

"நீ சொல்கிற விஷயம் ஒன்றும் விளங்கவில்லையே" என்றான் ஹியூகி ஆச்சரியத்துடன்.

"நீ இன்று ஸ்டுடியோவில் பார்த்த கிழவர் வேறு யாருமல்ல, ஹாஸ்பர்க் பிரபுதான், அவர் எனக்கு நெருங்கிய நண்பர், எனது படங்கள் எல்லாவற்றையும் அவரே வாங்குகிறார். தன்னை ஒரு பிச்சைக்காரன் மாதிரி படமெழுதவேண்டுமென்று ஒரு மாதத்துக்கு முந்தி கேட்டுக்கொண்டார். கந்தல் துணிகளுடன் ஒரு அற்புத உருவமாகவே விளங்கினார். அவர் அணிந்திருந்த கந்தல் ஆடை நான் ஒரு சமயம் ஸ்பெயினில் வாங்கியதாகும்.

"ஹாஸ்பர்க் பிரபுவா! நான் ஒரு சவரனைக் கொடுத்தேனே" என்று சொல்லிக்கொண்டே ஹியூகி மனக்கலக்கத்துடன் ஒரு நாற்காலியில் அப்படியே சாய்ந்து விட்டான்.

"ஒரு சவரனைக் கொடுத்தாயா?" என்று கத்திக்கொண்டே டிரெவர் இடுப்பொடியச் சிரித்தான். "நீ அதைத் திரும்பப் பார்க்கப் போவதில்லை ஹியூகி." "ஆலன், நீ என்னிடம் விஷயத்தை முன்னதாகச் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? இப்படியொரு மடையன் போல் நான் நடந்து கொள்ளும்படி விட்டிருக்கக் கூடாது" என்றான் ஹியூகி.

"இந்தமாதிரி, யோசனை பண்ணமல் நீ தானம் பண்ணிக்கொண்டிருக்கிருய் என்று எனக்குத் தெரியாது. மாடலாக இருக்கும் ஒரு அழகிக்கு நீ முத்தம் கொடுப்பதென்ருல், அதை என்னல் புரிந்து கொள்ள முடியும்; ஆனல், ஒரு அவலட்சண மாடலுக்கு ஒரு சவரனைக் கொடுப்பது என்ன விந்தை! மேலும் நீ வந்த பொழுது ஹாஸ்பர்க் தமது சாதாரண உடையில் இல்லை. தன்னை யார் என்று பிறர் அறிந்து கொள்வதை அவர் விரும்புவாரா?" என்ருன் டிரெவர்.

"அவர் என்னை ஒரு முழுமூடன் என்று தான் எண்ணிக்கொள்வார்" — என்ருன் ஹியூகி.

"அப்படியேயில்லை. நீ போனதும் அவர் ரொம்ப மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள அவர் ஏன் அவ்வளவு ஆசைப்பட்டார் என அந்தச் சமயத்தில் எனக்கு விளங்கவில்லை. இப்போதுதான் விஷயம் புரிகிறது. நீ கொடுத்த சவரனை அவர் வட்டிக்குப் போட்டு, உனக்கு ஆறு மாதத்திற்கொருமுறை வட்டி தருவார். சாப்பாட்டுக்குப் பிறகு இந்த அனுபவத்தைப் பற்றி ஒரு நல்ல கதை சொல்ல அவருக்கு சந்தர்ப்பம் வாய்த்தது."

"நான் துரதிர்ஷ்டம் பிடித்த பேய், இப்போதே நான் தூங்கப்போய் விடுவது தான் மேலான காரியம். ஆலன், இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லி விடாதே. நான் முகத்தை வெளியில் காட்டுவதற்கே இல்லை."

"என்ன பைத்தியக்காரத்தனம்! உனது தாராள மனப்பண்பை யல்லவா இந்த சம்பவம் காட்டுகிறது? ஓடிவிடாதே. இன்னொரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொள், லாராவைப் பற்றி வேண்டிய மட்டும் பேசு."

ஹூயூகி உடனேயே புறப்பட்டுப் போய் விட்டான், அவன் மனம் நிம்மதி யற்றது, ஆலன்மட்டும் நினைத்து நினைத்துச் சிரித்துக் கொண்டே யிருந்தான்.

மறு நாட்காலை, ஹூயூகி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, ஹாஸ்பர்கிட மிருந்து ஒரு ஆள் தேடிவந்தான். தனது மன்னிப்பைக் கோரி ஆள்விட்டிருப்பதாக ஹூயூகி எண்ணிக்கொண்டான்.

வயது முதிர்ந்த மனிதர் தங்க மூக்குக் கண்ணாடியுடன் காட்சியளித்தார்.

"நீர்தானே எர்ஸ்கின்?"

"ஆம்" என்று தலை யசைத்தான் ஹூயூகி.

"நான் ஹாஸ்பர்க் பிரபுவிடமிருந்து வந்திருக்கிறேன். அவர்—"

"நான் அவரிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவியுங்கள்" என்று ஹாயூகி குழறினன்.

"பிரபு உமக்கு இந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பி யிருக்கிருர்."

கடிதத்தின் உறையின்மேல், "ஒரு கிழட்டுப் பிச்சைக் காரன் ஹாயூகி ரெஸ்கினுக்கும் லாரா மெர்ட்டனுக்கும் அளிக்கும் மணப்பரிசு என்று எழுதியிருந்தது. உள்ளே பதினுயிரம், பவுனுக்கு ஒரு செக் இருந்தது!

கல்யாண விருந்தின் போது ஹாஸ்பர்க் பிரபு தம்பதிகளைப் பாராட்டிப் பேசினர்.

"கோடீஸ்வரர்கள் மாடலாக வருவது ரொம்பவும் அபூர்வந்தான். ஆனல், மாதிரி புருஷர்களாக விளங்கும் கோடீஸ்வரர்களைக் காண்பது அதைவிடவும் அபூர்வம்" என்ருன் ஆலன்டிரெவர்.

2. ஆனந்த ராஜகுமாரன்

ராஜதானியின் தலைநகரம் நாகரிகத்திலும் தலை சிறந்து நின்றது. வானளாவும் மாளிகைகளும், கோபுரங்களும் அணி செய்தன. மிக உயர்ந்த ஒரு தூணின்மேல் ஆனந்த ராஜகுமாரனின் உருவச்சிலை அமைக்கப்பட்டிருந்தது. சிலை முழுவதும் மெல்லிய தங்கத் தகட்டால் பொதியப்பெற்று சூரிய வொளியில் பிரகாசித்தது. இரு நீலமணிகள் கண்மணிகளாகத் திகழ்ந்தன. ஒரு கரத்தில் தாங்கிய கூரிய வாளின் பிடியைப் பெரிய முட்டை வடிவமான சிவப்பு ரத்தினம் அழகு படுத்தியது. எல்லோரும் இந்த உருவச் சிலையைப் பார்த்துப் புகழ்ந்தார்கள்.

"நீயும் ஏன் ராஜகுமாரனைப் போல் இருக்கக்கூடாது? அவன் உன்னைப்போல் ஒரு பொருளுக்காகவும் அழுவதில்லையே!" என்று அம்புலியைக் காட்டி அழும் பிள்ளையிடம் ஒரு தாய் சொன்னாள். அந்த அற்புதச் சிலையைப்

பார்த்த மற்றொருவன், "இந்த உலகில் ஒருவனுவது மிகவும் சந்தோஷகரமாக இருக்கிறானே; அது மகிழ்தற்குரிய காரியந்தான்" என்றான் — இவன் வாழ்க்கையில் வெறும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையுமே கண்டவன் போலும்!

அவன் ஒரு தேவதூதன் மாதிரி யல்லவா ஜ்வலிக்கிறான் என்று அநாதை ஆசிரமக் குழந்தைகள் சொல்லிக் கொண்டன. "நீங்கள் தேவதூதனைப் பார்த்ததில்லையே, பின் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று கணித சாஸ்திர ஆசிரியர் அந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கோபக் குறியுடன் கேட்டார் — குழந்தைகள் கனவு காண்பதென்றால் இவருக்குக் கொஞ்சமும் பிடிக்காது.

ஒருநாள் இரவு ஒரு நீர்க்குருவி எங்கிருந்தோ அந்நகருக்கு வந்தது. அதன் தோழர்கள் எல்லாம் ஆறு வாரத்திற்கு முன்பே எகிப்துக்குப் பறந்துபோய்விட்டார்கள்; இந்தக் குருவிமட்டும் பின் தங்கிவிட்டது-மிக அழகான நாணலுடன் அது காதல் லீலை நடத்தியதுதான் இதன் காரணம்.

வசந்த காலத்தில் ஒருநாள் காலை அது ஒரு வண்ணாத்திப் பூச்சியைத் தொடர்ந்து நதிக்குச் சென்றது. அங்கே அழகிய நாணல்

புன்சிரிப்புடன் வரவேற்றது. அதன் அழகில் சொக்கிப்போய் நீர்க்குருவி நாணலைச் சுற்றிச் சுற்றி வந்தது. அது தாழ்ந்து பறந்தபோது, அதன் இறகுகள் தண்ணீரில் அடித்துப் பல வளையங்களை உண்டு பண்ணின. "நான் உன்னைக் காதலிக்கட்டுமா?" என்று கேட்டது குருவி. சுற்றிச் சுற்றி வளைத்துப்பேசி வீண் நேரம் போக்க அது விரும்பாததால், சட்டென்று காரியத்துக்கே வந்துவிட்டது. நாணலும், மிகுந்த நாணத்துடன், தலையைத் தாழ்த்தி, தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டது. மீண்டும் குருவி ரீங்கார சப்தமிட்டு அதைச் சுற்றிச் சுற்றி வந்தது. இதுதான் அது நடத்திய காதல் லீலை. கோடைகாலம் முழுமையும் இது நடைபெற்றது. மற்றக்குருவிகள் இந்தக் காட்சியைப் பார்த்துக் கேலி செய்தன. "நாணலிடம் பணமில்லை; அதற்குச் சுற்றத்தார் அதிகம்" என்றன. இலையுதிர் காலத்தில் எல்லாக் குருவிகளும் பறந்துபோய் விட்டன.

தோழர்கள் எல்லாம் பிரிந்து சென்றதும், இந்தக் காதல் குருவிக்குத் தனிமை தட்டிற்று, காதல் லீலையிலும் அலுப்புத் தோன்றியது. "இவளுக்கு நயமாகச் சம்பாஷிக்கும் திறமையில்லை. மேலும் பெரிய சாகசக்காரி

போல் தெரிகிறது, எப்போதும் காற்ரோடு விளையாடிக் கொண்டிருக்கிருள் அல்லவா ?" என்று எண்ணியது குருவி. உண்மைதான். காற்றடித்த போதெல்லாம் நாணல், மரியாதை யுடன் தலை தாழ்த்தி ஆடிக் கொண்டிருந்தது. "அதுமட்டுமல்ல; இவளுக்கு எப்போதும் இருக் கிற இடத்திலேயே இருக்கத்தான் பிரியம், எனக்கோ சதா சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டேயிருக்க வேண்டும், என்மனைவியும் எனக்கேற்றபடி அமையவேண்டியது அவசிய மல்லவா ?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு நாணலிடம், "நீ என்னோடு வருகி ருயா ?" என்று கேட்டது. நாணலுக்கு இருந்த இடத்தை விட்டுக் கிளம்ப முடியாது, ஆகை யால் முடியாது என்று தலையசைத்தது. "இது வரை நீ என்னை ஏமாற்றி விட்டாய், நான் முக் கோண கோபுரங்களைப் பார்க்கப் போகி றேன்" என்று சொல்லிக் கொண்டே குருவி பறந்து போய்விட்டது.

இரவு முழுமையும் பறந்து, கடைசியாக இந்த ராஜகுமாரனது நகரத்தை அடைந்தது. "நான் எங்கே தங்குவது ? இங்கு எல்லாவசதி யும் எனக்காகச் செய்யப்பட்டிருக்கும் என நம்புகிறேன்" என்று சொல்லிக்கொண்டது. அந்தச் சமயத்தில் தான் ஆனந்த ராஜகுமார

னது அழகான உருவச்சிலை அதன் கண்ணில் பட்டது. "தங்குவதற்குத் தங்கமான இடம்! நல்ல, புதுக்காற்று" என்று சொல்லிக் கொண்டே, சிலையின் கால்களுக் கிடையே குந்திற்று. தன்னைச் சுற்றி ஒரு முறை பார்த்துப் பூரிப்படைந்தது. தங்கமயமான படுக்கையறை! தலையைச் சிறகுக்குள் நுழைத்துத் தூங்கப் போகும் சமயம், ஒரு பெரிய நீர்த்துளி அதன் மேல் விழுந்தது. "என்ன ஆச்சரியம்! வானத்தில் ஒரு துண்டு மேகங்கூட இல்லை- நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் மழை பெய்கிறதே! நாணலுக்கு மழையென்ருல் ரொம்பப் பிரியம்" என்று குருவி சொல்லிக்கொண்டது. அந்தச் சமயத்தில் இன்னொரு துளியும் விழுந்தது.

"மழைகூடத் தடுக்கமுடியாத ஒரு சிலை இருந்துதான் என்ன பிரயோசனம்?" என்று கேட்டது. "புகைக்குழாய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதுதான்." குருவி பறந்து போக யத்தனித்தது. சிறகுகள் விரியு முன்பு மூன்ருவது துளியும் விழவே, தலையை உயர்த்தி மேலே பார்த்தது. அங்கு என்ன கண்டது!

ஆனந்த ராஜகுமாரனின் கண்களில் நீர் ததும்பி நின்றது. அவனுடைய பொன் மயமான கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடி

யது. பூரணச் சந்திரனுடைய பிரகாசத்திலே அவன் முகம் ஜ்வலித்தது. அந்தக் காட்சியும் கண்ணீரும் சிறு பறவையின் மனத்தை இளக்கிவிட்டன.

"நீ யார்?"

"நான்தான் ஆனந்த ராஜகுமாரன்."

"நீயேன் அழுகிறாய்? என்னை முழுமையும் கண்ணீரால் நனைத்துவிட்டாயே."

"நான் உயிரோடிருந்த காலத்தில் இன்ப மாளிகையில் வசித்து வந்ததால், எனக்குக் கண்ணீர் என்றாலே என்னவென்று தெரியாது. அந்த மாளிகைக்குள்ளே துன்பத்திற்கு அனுமதி கிடையாது. பகல் நேரத்தில் நான் தோழர்களுடன் தோட்டத்தில் விளையாடுவேன். மாலையில் மாளிகைக்குள்ளே சதா களியாட்டந்தான். இந்தத் தோட்டத்தைச் சுற்றிலும் உயரமான மதில் இருந்தது. இந்த மதிலுக்கு அப்பால் என்ன இருக்கின்றது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று நான் விரும்பியதில்லை. அரண்மனையில் எல்லோரும் என்னை ஆனந்த ராஜகுமாரன் என்றே அழைத்தார்கள். நான் ஆனந்த வாழ்க்கையே வாழ்ந்தேன்; அப்படியே மாண்டேன். இப்போது இவ்வளவு உச்சஸ்தானத்தில் எனது சிலையை நிறுத்தி

யிருப்பதால், எனது நகரத்தின் அவலட்சணங் களையும் துன்பங்களையும் பார்க்க முடிகிறது. எனது இருதயம் ஈயமாக இருப்பினும், என்னால் அழுவதைத் தடுக்க முடியவில்லை" என்று சொல்லிற்று. அந்தத் தங்க மயமான உரு வச்சிலை.

"என்ன! அப்படி யானல் சிலை முழுமை யும் கட்டித் தங்கமல்லவா?" என்று குருவி தனக்குள்ளே கேட்டுக்கொண்டது. தன் சொந்த அபிப்பிராயத்தை வெளியே சொல்வது மரியாதைக் குறைவு என்பது அதன் கருத்து.

தாழ்ந்த, இனிய, இசைக்குரலில் சிலை மீண்டும் தொடர்ந்து சொல்லிற்று: "வெகு தூரத்தில், ஒரு சிறுசந்தில் ஒரு ஏழையின் வீடு. அதன் ஜன்னல் ஒன்று திறந்திருக்கிறது. ஒரு மேஜை முன்பு ஒரு பெண் உட்கார்ந்திருப்பது தெரிகிறது. கன்னங்கள் ஒட்டியமுகம். கவலை தோய்ந்து காணப்படுகிறது. அவள் ஒரு தையல்காரி. கைகள் நல்ல சிவப்பாயிருக்கின் றன. பல இடங்களில் ஊசி குத்திய வடுக்கள் இருக்கின்றன. ராணியின் தோழியொருத்தி அடுத்துவரும் அரண்மனை நடனத்தில் அணிந்து கொள்வதற்காக, அவளுக்கு ஒரு பட்டுச்சட் டையில் பல வித வர்ணப்பூக்களைத் தைத்துக் கொண்டிருக்கின்றாள். அந்த அறையின் ஒரு

மூலையில் சிறிய பையன் தேக அசௌக்கிய முற்றுப்படுத்திருக்கின்றான். அவனுக்குச் சுரம்; ஆரஞ்சுப்பழம் சாப்பிட ஆசைப்படுகிறான். தாய்க்கோ ஆற்று நீரைத் தவிர வேறொன்றும் கொடுக்க சக்தியில்லை. ஆரஞ்சுப்பழம் எப்படி வாங்கிக்கொடுக்கப் போகிறாள்? பையனோ அழுதுகொண்டிருக்கிறான். குருவி, குருவி, சின்னஞ் சிறு குருவீ! எனது வாள் பிடியி லிருக்கும் சிவப்புரத்தினத்தை யெடுத்துக் கொண்டுபோய் அவளுக்குக்கொடுக்க மாட் டாயா? எனது கால்களைக் கீழேயிருக்கும் பீடத்தில் நன்றாக இறுக்கி முடுக்கியிருப்பதால் என்னால் அசைய இயலாது."

"என்னை இப்போது எகிப்திலல்லவா எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்கள்? என் நண்பர் கள் நீல நதியில் மேலுங் கீழும் பறந்து, மலர்ந்த தாமரை மலர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பார்கள். அந்த மகாமன்னரின் கல்லறையில் சீக்கிரமே தூங்கப்போய் விடு வார்கள்" என்றது நீர்க்குருவி.

"குருவி, குருவி, சின்னஞ்சிறு குருவீ! என்னோடு ஒரு இரவு தங்கி, எனது தூதனாக இருக்கமாட்டாயா? பையனுக்கோ தண்ணீர்த் தாகம் அதிகம்; தாயின் துயரத்தைச் சொல் லிமுடியாது" என்றது உருவச்சிலை.

"எனக்குப் பையன்கள் என்றாலே அவ்வளவு விருப்பம் என்று சொல்ல முடியாது. சென்ற கோடைகாலத்தில் நான் நதியில் தங்கியிருந்த சமயம், இரண்டு முரட்டுப்பையன்கள் என்மீது கல்லைவிட்டெறிந்தார்கள். நான் தப்பிக்கொண்டேன். இருந்தாலும் அவர்கள் செய்தது மரியாதைக் குறைவான காரியம் அல்லவா?" என்றது நீர்க்குருவி.

இதைக் கேட்டதும் ஆனந்த ராஜ குமாரனுக்கு மீண்டும் அழுகை வந்து விட்டது. குருவியின் மனமும் இளகிவிட்டது. "இங்கு ரொம்பக் குளிராக இருக்கிறது. இருந்தாலும் உன்னுடன் இன்றிரவுமட்டும் தங்கி, உனது கோரிக்கையைப் பூர்த்தி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, ராஜகுமாரனின் வாள் பிடியிலிருந்த ரத்தினத்தைக் கொத்தியெடுத்துக் கொண்டு பறந்துபோயிற்று. மாதாகோவில் கோபுரத்தைத் தாண்டிச் சென்றபோது, வெள்ளைச் சலவைக்கல்லில் செதுக்கி வைக்கப்பட்டிருந்த தேவதூதர்களைக் கண்டது. அரண்மனைக்கு மேலே பறந்தபோது, உள்ளே நடனம் நடந்துகொண்டிருக்கும் சப்தம் கேட்டது. ஒரு அழகி தன் காதலனுடன் வெளியே வந்தாள். "நட்சத்திரங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. காதலின் சக்தியே சக்தி"

யென்றான் காதலன். "ராஜ நடனத்துக்கு முந்தி எனது ஆடைகள் தயாராய்விடும். ஆனால், இந்தத் தையல்காரிகளே பெரிய சோம்பேறிகள்" என்றாள் அந்தப் பெண்.

குருவி நதியைக் கடந்து பறந்தது. ஓரிடத்தில் யூதர்கள் பேரம் பேசிக்கொண்டிருப்பதையும், பித்தளைத் தராசுகளில் பணத்தைப்போட்டு நிறுப்பதையும் கண்டது. கடைசியாக அது அந்த ஏழையின் வீட்டை அடைந்தபோது உள்ளே படுக்கையில் பையன் நோயின் கடுமைதாங்கமாட்டாது அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தான். தாயோ மிகவும் களைத்துப் போய் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டாள். அவள் பக்கத்திலிருந்த மேஜை மீது ரத்தினத்தை மெதுவாகப் போட்டுவிட்டுக் குருவி பையனின் படுக்கையை ஒரு முறை சுற்றிச் சிற கடித்தது. "எவ்வளவு குளுமையாக இருக்கிறது. இனிக் குணமடைந்து விடுவேன்" என்று சொல்லிக்கொண்டே ஆனந்த மயமான தூக்கத்தில் பையன் ஆழ்ந்துவிட்டான்.

நீர்க்குருவி ராஜகுமாரனிடம் பறந்து சென்றது. தான் கண்டதையும், செய்ததையும் சொல்லிற்று. "ரொம்பக் குளிராக இருந்தாலும், எனக்குக் கதகதப்பாகவே இருக்கிறது" என்றது குருவி. "நீ ஒரு மகத்தான காரியத்

தைச் செய்ததுதான் இதற்குக் காரணம்'' என்றான் ராஜகுமாரன். இதை எண்ணிக் கொண்டே குருவியும் தூங்கிவிட்டது. எதை யாவது பற்றி யோசிக்க ஆரம்பித்தாலே குரு விக்குத் தூக்கம் வந்துவிடும்.

மறுநாள், “ இன்றிரவு நான் எகிப்து செல் லப்போகிறேன் ” என்றது குருவி மிகுந்த குதூகலத்துடன். “உனக்கு அங்கு ஏதேனும் காரியம் ஆகவேண்டி யிருக்கிறதா ? ''

“ குருவி, குருவி, சின்னஞ்சிறு குருவீ! இன்னும் ஒரு இரவுமட்டும் என்னோடிருக்க மாட்டாயா ? ” என்று கேட்டது உருவச்சிலை. “ நகரின் ஒரு கோடியிலுள்ள சிறுவீட்டில் ஒரு வாலிபன் தனது மேஜைமீது சாய்ந்து காகிதப் படுக்கைமீது தலையைப் போட்டுக் கொண்டி ருக்கிறான். அவன் பக்கத்தில் ஒரு குவளையில் வைக்கப்பட்டிருந்த நீலோற்பல மலர்கள் வாடி வதங்கிப் போயின. அவனுக்கு மாதுளம்பழ வித்துப்போன்ற இதழ்கள். விசாலமான கண்கள். நாடகத்துக்காக எழுதிக் கொண்டி ருந்த கதையை முடிக்க முயல்கின்றான். மேற்கொண்டு எழுதிமுடிக்க இயலாமல் சோர்ந்துபோனான். அடுப்பில் நெருப்பில்லை. குளிரில் நடுங்குகிறான். பசி காதையடைத்து விட்டது.”

"அப்படியானல் இன்றிரவுமட்டும் உன்னேடிருக்கின்றேன். அவனுக்கு ஒரு ரத்தினத்தைக் கொண்டு கொடுக்கட்டுமா?" என்றது குருவி.

"என்னிடம் வேறு ரத்தினம் இல்லையே. எனது கண்களில் அழகிய அபூர்வ நீலக்கற்கள் இருக்கின்றன. இவற்றை ஆயிரம் வருஷங்கட்குமுன் இந்தியாவிலிருந்து கொண்டுவந்தார்கள். அவற்றில் ஒன்றைப் பிடுங்கிக் கொண்டுபோய் அந்த எழுத்தாளனிடம் கொடுத்துவிடு. அவன் அதைக் காசுக்கடைக்காரனிடம் விற்று, விறகு வாங்கி, கதையை முடித்துவிடுவான்" என்றுன் ராஜகுமாரன்.

"எனதருமை ராஜகுமாரா! என்னல் அப்படிச் செய்ய முடியாது" என்று அழவாரம்பித்துவிட்டது குருவி.

"குருவியே, நான் உத்தரவிடுகிறேன். அப்படியே செய்" என்றுன் ராஜகுமாரன் அதிகாரதோரணையில். குருவி அவ்வாறே ராஜகுமாரனின் கண்ணில் பதிக்கப்பெற்றிருந்த நீலக்கல்லைப் பிடுங்கிக்கொண்டுபோய் அந்த மாணவனுடைய குடிலை அடைந்தது. கூரையிலிருந்த ஓட்டை வழியாக உள்ளே புகுந்து, வாடிக்கிடந்த நீலோற்பல மலர்களுக்கிடையே அந்த நீலக்கல்லை மெதுவாக நழுவவிட்டுவிட்டு

பறந்து வந்துவிட்டது குருவி. மாணவன் கண் விழித்தான். நீலக்கல்லைக் கண்டான். இப்போது தனது கதைகளைப் பாராட்ட ஆரம்பித்துவிட்டார்கள் என ஆனந்தங் கொண்டான். யாரோ பெரிய ரசிகர் தன்னைப் பாராட்டி, இந்தக்கல்லைப் பரிசாக அனுப்பியிருப்பதாக எண்ணிக்கொண்டான்.

குருவி ராஜகுமாரனை அடைந்தது.

மறுநாள் காலை "நான் இன்று எகிப்து போகப் போகிறேன்" என்றதும், இன்னும் ஒரு இரவு தன்னேடிருக்கும்படி ராஜகுமாரன் வேண்டிக் கொண்டான்.

"இங்கு குளிர்காலம். பனிவிழ ஆரம்பித்து விடும். எகிப்திலே, பச்சைப் பசேலென்ற பனைமரத்தின் மேலே சூரியன் காயும். எனது தோழர்கள் பால்பெக் கோவிலில் கூடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் எப்படியும் அங்குபோய்ச் சேரவேண்டும். ஆனால் உன்னை மறந்துவிடமாட்டேன். அடுத்த வசந்த காலத்தில் நான் இங்கு வரும்போது, நீ இழந்துவிட்ட ரத்தினங்களுக்குப் பதிலாக, சிவப்பு ரோஜாவையும் தோற்கடிக்கும் ரத்தினத்தையும், கடலைப்போன்ற நீலநிறமுள்ள கற்களையும் உனக்குக் கொண்டு வருவேன்" என்றது குருவி.

"கீழேயுள்ள சதுக்கத்தில் ஒரு இளம் பெண் நிற்கின்றாள். அவள் கையிலிருந்த நெருப்புக் குச்சிகள் கைதவறிச் சாக்கடையில் சிதறிவிட்டன. வீட்டுக்குப்போனால் தந்தை உதைத்துவிடுவான். ஆகையால் எனது இரண்டாவது கண்ணையும் பிடுங்கி அவளிடம் கொடுத்துவிடு" என்றான் ராஜகுமாரன்.

"வேண்டுமானால் இன்றிரவும் உன்னோடு தங்குகிறேன்; ஆனால், உன்னை முழுக்குருடனாக்கிவிட நான் இசையமுடியாது" என்றது குருவி.

ராஜகுமாரன் மேலும் வற்புறுத்திக் கட்டளையிடவே, அப்படியே மற்றொரு நீலக்கல்லையும் பிடுங்கிக்கொண்டு போய், அந்தச் சிறுமியின் உள்ளங்கையில் போட்டது குருவி. "என்ன அழகான கண்ணாடித்துண்டு" என்று சொல்லிக்கொண்டே அந்தச் சிறுமி, சிரிப்புடன் ஓடிச் சென்றாள் வீட்டுக்கு.

குருவி திரும்பி வந்தது. "இப்போது நீ முழுக்குருடனாகி விட்டாய். நான் உன்னை விட்டு விட்டுப் போகப் போவதில்லை" யென்றது குருவி

"கூடாது, நீ கட்டாயம் எகிப்து போகத்தான் வேண்டும்" என்றான் ராஜகுமாரன்.

"நான் இனி எப்போதும் உன்னுட

னேயே இருப்பேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் காலடியில் படுத்துறங்கப் போயிற்று குருவி.

மறுநாள் முழுவதும் குருவி, ராஜகுமாரனின் தோளின் மேல் உட்கார்ந்து கொண்டு, தான் பல தேயங்களிலும் கண்ட காட்சிகளைப் பற்றிக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தது.

"எனதருமைக் குருவியே, நீ அதியற்புதமான கதைகள் சொல்கிறாய். ஆனால் உலகில் மனிதர் படுந்துன்பந்தான் எல்லாவற்றையும் விட மிகவும் அதிசயிக்கத்தக்க விஷயமாகும். உலகிலே, பரம ரகசியமான விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. இருந்தாலும், மனிதர் படும் துன்பத்துக்குக் காரணந்தான் பெரிய மறை பொருளாக இருக்கிறது. இந்த நகரத்தைச் சுற்றிப்பறந்து, நீ அங்கங்கே காணும் காட்சிகளை எனக்குச் சொல்" என்றான் ராஜகுமாரன்.

ஊரைச் சுற்றிப் பறந்து ஊர்வலம் வந்தது குருவி. செல்வந்தர்கள் தங்களது அழகிய மாளிகைகளில் உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் வாயில்களில் பிச்சைக்காரர்கள் காத்துக் கிடந்தனர். இருளடர்ந்த சந்துகளில், பட்டினியால் வெளிறிப் போன முகங்களுடன் குழந்

தைகள் காட்சியளித்தன. மழைக்குப் பயந்து இரு சிறுவர் ஒரு பாலத்தினடியில் ஒதுங்கியிருந்தனர். அங்கே வந்த காவற்காரன் அவர்களை வெளியே மழையில் துரத்தி விட்டான். இந்தத் துக்ககரமான விஷயங்களையெல்லாம் குருவி ராஜகுமாரனிடம் போய்ச் சொன்னது.

"என்னை மெல்லிய தங்கத்தால் பொதிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு இலையாகப் பிய்த்தெடுத்து ஏழைகளுக்குக் கொடுத்துவிடு. தங்கம் தங்களுக்கு இன்பம் தரும் என்றே வாழும் மனிதர்கள் எண்ணுகிறார்கள்" என்றான் ராஜகுமாரன்.

அப்படியே ஒவ்வொரு இலையாக அந்த உருவச் சிலையை மூடியிருந்த தங்கத் தகடுகள் எடுக்கப்பட்டன. ஆனந்த ராஜகுமாரன் இப்போது நிறம் மாறிவிட்டான். ஆனால் ஏழைகள் முகம் மலர்ச்சியுற்றது. வீதிகளிலும் சந்துகளிலும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் விளையாடினர். "இப்போது நமக்கு உணவு கிடைத்து விட்டது" என்ற எண்ணமே அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம்.

பனி வந்தது, பனிக்கட்டிகள் மழை போல் விழவாரம்பித்தன. வீதிகள் வெள்ளிப்பாளங்களால் மூடப்பட்டது போல் விளங்கின.

கண்ணாடி ஈட்டிகள் போன்று கூர்மையான பனித்துண்டுகள் கூரைகளிலிருந்து கீழே விழுந்தன. பையன்கள் பனிச்சறுக்குகளில் விளையாடினர்.

நீர்க்குருவி குளிரால் நடுங்க ஆரம்பித்தது. ஆனாலும் அது ராஜகுமாரனை விட்டுப் பிரிய மனங்கொள்ளவில்லை. அவன் மீது அவ்வளவு பிரியம் அதற்கு. தனக்கு இறுதிக் காலம் கிட்டி விட்டது என்பதை உணர்ந்து கொண்டது. ராஜகுமாரனுடைய தோளில் ஏறி "நான் போய் வரட்டுமா?" என்றது.

"நீ எகிப்து போகப் போவது பற்றி சந்தோஷமடைகிறேன்" என்றான் ராஜகுமாரன். "நான் உன்னைக் காதலிக்கின்றேன். எனக்கு ஒரு முத்தந்தா."

"நான் போவது எகிப்துக்கல்ல, மரண வீட்டுக்கே செல்லப்போகின்றேன். மரணம் தூக்கத்தின் சகோதரன் அல்லவா?" என்றது குருவி. ராஜகுமாரனை முத்தமிட்டுவிட்டு அவன் பாதங்களில் மடிந்து விழுந்தது.

அதே சமயத்தில் அந்தச் சிலைக்குள்ளேயிருந்து ஒரு ஓசை பிறந்தது. ராஜகுமாரனின் ஈய இருதயம் இரண்டாகப் பிளந்ததே, சப்தத்தின் காரணம். அது மிகக் கடுமையான பனிதான்.

மறுநாட்காலே நகரமேயர், தமது கவுன் சிலர்களுடன் அந்தப் பக்கமாக வந்தார். சிலே யைப்பார்த்தார். "எவ்வளவு அவலட்சண மாக ஆனந்த ராஜகுமாரன் தோன்றுகின் ருன்!" என்ருர் மேயர். "ஆம், ஆம்! மிக வும் அவலட்சணந்தான்" என்றனர் கவுன் சிலர்கள். அவர்கள் எப்போதும் மேயர் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்வது வழக்கம். உயரே ஏறிச் சிலேயைப் பார்த்த னர். "ரத்தினங்களேக் காணவில்லே. சிலேயும் பொன் சிலேயாக இருக்கவில்லே. உண்மையில் நமது ராஜகுமாரனுக்கும் ஏழைப் பிச்சைக் காரனுக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லேயே!" என்ருர் மேயர். ஆம், ஆம்; என்றனர் கவுன்சிலர்கள். "காலடியில் ஒரு பறவை அல்லவா செத்துக்கிடக்கிறது. இனி மேல் உருவச்சிலேயின் காலடியில் பறவைகள் செத்து விழக்கூடாது என்று உடனேயே ஒரு உத்தரவு போட வேண்டும்" என்ருர் மேயர்.

இனி இந்தச் சிலே நகரின் கவுரவத்துக்கு ஏற்றதல்லவென்று அதைக் கீழே இறக்கி விட்டார்கள் அழகாக இல்லாத சிலே ஒன்றுக் கும் பயன்படாது என்று கலேப்பண்டிதர் யூனிவர்ஸிட்டியில் சொன்னுர்.

அந்தச் சிலையை ஒரு பெரிய கொப்பரையில் போட்டு உருக்கினார்கள். உருக்கின உலோகத்தைக் கொண்டு என்ன செய்வதென்பது பற்றி யோசிக்க, மேயர், கார்ப்பரேஷன் கூட்டத்தைக் கூட்டினார். "நகரத்துக்கு எப்படியும் ஒரு சிலை வேண்டியதுதான். அது என்னுடைய சிலையாக இருக்கட்டுமே" என்றார் மேயர். "என் சிலையாக இருக்கட்டும்", "என் சிலையாக இருக்கட்டும்" என்று ஒவ்வொரு கவுன்சிலரும் கூச்சல் போட்டார்கள். இன்னும் அவர்கள் கூச்சல் ஓய்ந்தபாடில்லை!

"என்ன அதிசயம் இது! ஈய இருதயம் உருக மாட்டேன் என்கிறதே" என்றான் தொழிற்சாலை மேஸ்திரி. கடைசியில் அதைக் குப்பைத் தொட்டியில் எறிந்தார்கள். அதில் தான் அந்தக் குருவியும் கிடந்தது.

"நகரிலுள்ள இரண்டு மதிப்பிட முடியாத பொருள்களைக் கொண்டு வாருங்கள்" என்றார் கடவுள் தம் தூதர்களிடம். ஈய இருதயமும், இறந்து போன குருவியும் அவர் முன்பு வைக்கப்பட்டன.

"நீங்கள் கொண்டு வந்த பொருள்கள் உண்மையிலேயே தகுதியான பொருள்கள் தான். எனது சொர்க்கப் பூங்காவனத்தில்

இந்தச் சிறு பறவை சதா பாடிக்கொண்டே யிருக்கும். எனது பொன் நகரில் இந்த ராஜ குமாரன் சதா என்னைத் துதித்துக் கொண்டே யிருப்பான்'' என்றார் கடவுள்.

3. இளவரசனின் பட்டாபிஷேகம்

அல்லது ராஜகுமாரனின் கனவுகள்

அன்று பட்டாபிஷேக தினத்துக்கு முந்தின நாள். இளவரசன் தனது சிங்கார மாளிகையில் தனிமையாக வீற்றிருந்தான். அவனது தோழர்களும் சேவகர்களும் வழக்கம்போல் தலைவணங்கி விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள். ராஜசபையில் எவ்வாறு மரியாதையுடனும், ஆசாரத்துடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கடைசிமுறையாகக் கற்றுக் கொள்ளத்தான் அவர்கள் அரண்மனையிலுள்ள மற்றொரு மண்டபத்துக்கு தத்தம் ஆசிரியரிடம் சென்றிருந்தார்கள். இளவரசனுக்குப் பதினாறு வயதுதானாகியிருந்தது. அவர்கள் தன்னைவிட்டுப் பிரிந்துபோனதில் அவனுக்கு ஒருவித ஆறுதல் ஏற்பட்டது. வெல்வெட் மெத்தைகள் போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தான். அவனது நிலை, புதிதாக வேடர் கையி

லகப்பட்டுக் கூண்டிலடைபட்ட ஒரு சிறு மிருகத்தின் நிலையை ஒத்திருந்தது. உண்மையில் அவன் ஒரு ஆடுமேய்ப்பவன் வீட்டில் வளர்ந்தவன்தான். ஒருநாள் அவன் தன் வளர்ப்புத் தந்தையுடன் காட்டில் ஆட்டு மந்தையை ஓட்டிக் கொண்டிருந்தபொழுது வேட்டைக்காரர்கள் அவனை யதேச்சையாகக் கண்டு அரண்மனைக்கு அழைத்துவந்தார்கள். பழைய ராஜாவின் மகள், தன் அந்தஸ்துக்குக் குறைவான குலத்தைச் சேர்ந்த வாலிபன் ஒருவனைக் காதலித்து ரகசியமாகக் கல்யாணம் செய்து பெற்ற பிள்ளையே இந்த ராஜகுமாரன் என்று சிலர் சொல்லிக் கொண்டார்கள். அரண்மனையில்ஓவியங்கள் வரைவதற்காக அமர்த்தப்பட்ட கலைஞனை ராஜகுமாரி காதலித்து அதன் பயனாகப் பிறந்த குழந்தை, தாய் தூங்கிக்கொண்டு இருக்கும்போது அப்புறப்படுத்தப்பட்டு, காட்டில் வசித்துவந்த குடியானவன் ஒருவனிடம் வளர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டதென்றும், தாய்க்கு விஷமிடப்பட்டதென்றும், கலைஞன் குத்திக்கொல்லப்பட்டானென்றும், இருவரும் ஒரே கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனரென்றும் வேறுசிலர் சொல்லிக் கொண்டார்கள்.

இப்படியாக ராஜகுமாரனின் பூர்வீகக்

கதை ரகசியமாகப் பேசிக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். கிழ ராஜா தனது மரணப் படுக்கையில், தனது பாவச் செயலுக்காக வருந்தியோ, அல்லது தனது வம்சம் அற்றுப் போகக்கூடாதென்று கவலைகொண்டோ, அந்தக் குழந்தையை அழைத்துவரச் செய்து, தனது மந்திரி பிரதானிகள் முன்னிலையில் தனது வாரிசாக ஏற்றுக்கொண்டான்.

கலையழகிலே ஈடுபட்ட காதல் கனியாதலால், இளவரசனுக்கும் அழகான பொருள்கள் மீது அளவுகடந்த காதல் ஏற்பட்டிருந்தது. அவனுக்காக அரண்மனையில் ஒதுக்கப்பட்டிருந்த அறைகளில் போடப்பட்டிருந்த மெல்லிய ஆடைகளையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் பார்த்ததும் அவன் சந்தோஷம் தாங்கமாட்டாமல் வாய்விட்டுக் கூவி விட்டானும். காட்டில் தான் போட்டிருந்த ஆட்டுத் தோல் ஆடைகளை வீசியெறியும் போது அவன் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. இருந்தாலும், பழைய சுதந்திர வாழ்க்கையை தான் இழந்துவிட்டதை அவன் உணர்வதாகத் தெரிந்தது. அரண்மனை ஆசாரச் சடங்குகள் ஒன்றும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தன் புதுவாழ்வை ஆரம்பித்

துள்ள அரண்மனை—இன்பமாளிகை யென்று அதற்குப் பெயரிட்டிருந்தனர்—அவனுக்காகவே ஏற்பட்ட புது உலகமாக அவனுக்குத் தோன்றிற்று. சபாமண்டபம் அல்லது ஆஸ்தான மண்டபத்தை விட்டு வெளியேறியதும் அவன் படிக்கட்டுகள் வழியாகக் கீழே ஓடி, அந்த அரண்மனையின் ஒவ்வொரு பாகத்திலும் சந்தோஷத்துடன் சுற்றி வருவான்.

இளவரசனுடைய அரண்மனை வாழ்க்கையைப்பற்றிப் பற்பல கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஒரு சமயம் ஒரு நகரசபைத் தலைவர் அவனுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கவந்தபோது, ஒரு அழகிய படத்தின் முன்பு அவன் மண்டியிட்டு வணங்கிக்கொண்டிருக்கக் கண்டாராம். மற்றொரு சமயம் ராஜகுமாரன் திடீரென்று காணுமற்போய்விட்டான். பல மணி நேரம் தேடியபின், அரண்மனையின் ஒரு கோடியிலுள்ள அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த ஒரு அழகிய உருவச் சிலையை இமைகொட்டாமல் பார்த்து மெய்ம் மறந்திருக்கும் நிலையில் கண்டுபிடிக்கப்பட்டான். வெள்ளியினுல் செய்யப்பெற்ற ஒரு உருவச்சிலைமீது சந்திரனது ஒளி மழை பெய்து கொண்டிருக்கும் அற்புதக்காட்சியை ரசிப்ப

திலேயே ஒரு இரவு முழுவதும் கழித்ததாகவும் சொல்லப்படுவதுண்டு.

விலையுயர்ந்த, அபூர்வமான பொருள்கள் மீது அவனுக்கு எல்லையற்ற பிரேமை. வட கடல் கரைகளிலுள்ள செம்படவர்களிடமிருந்து அம்பர் வாங்கி வரவும், எகிப்து மன்னர்களது கல்லறைகளில் மட்டுமே காணப்படும் அபூர்வ வைடூரியங்களை வாங்கி வரவும், பெர்ஷியாவிலிருந்து பட்டு விரிப்புகள் வாங்கி வரவும், இந்தியாவிலிருந்து சல்லடை, தந்தம், சந்திர காந்தம், மணிவளையல், சந்தனக்கட்டை கம்பளி முதலியன வாங்கி வரவும் அவன் நாலாதிசைகளுக்கும் பல வியாபாரிகளை அனுப்பியிருந்தான்.

எல்லாப்பொருள்களிலும் மேலாக அவனது கவனத்தை அதிகமாக இழுத்தது, பட்டாபிஷேகத்தின்போது அவன் அணியவேண்டிய ஆடைதான்—பொன்னுடையும், ரத்தினம் பதித்த கிரீடமும், பவளம் பதித்த செங்கோலுந்தான். இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே அவன் முதல் நாள் தனது கட்டிலில் படுத்திருந்தான். பல மாதங்களுக்கு முன்னமேயே இவற்றைப்பற்றிய விவரங்களும், பிளான்களும் கொடுக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டுவிட்டன. இராப்பகலாக வேலைநடை

பெற்று வருகிறது. மஞ்சத்தில் படுத்தபடியே அவன், தேவாலய பீடத்தில் பட்டாபிஷேக ஆடையணிந்து நிற்பதாக எண்ணினன். அவனது இதழ்களில் இன்பச் சிரிப்பு மெல்லத் தலை காட்டிற்று, அவனது முகத்தில் பிர காசம் தோன்றிற்று.

இளவரசன் மஞ்சத்தை விட்டிறங்கித்தனது அறையைச் சுற்றி வந்தான். சுவர்களில் பல வர்ண வேலைப்பாடுகள் உள்ள சித்திரக் கம் பளங்கள் அழகின் வெற்றிக்கு ஓர் நல் அடை யாளம்போல் தொங்கின. சாளரத்தினருகே பலவித சித்திர வேலைப்பாடுகளுடன் செய் யப்பெற்றிருந்த மேஜை போடப்பட் டிருந்தது. அதன் மேல் பலகையில் பொன்னல் பல பூக்களும் சித்திரங்களும் பொறிக்கப்பெற்றிருந்தன. மேஜையின்மேல் பளிங்குக் கிண்ணங்கள் பல இருந்தன. சூர்ய காந்திப் பட்டில் தைக்கப்பட்டிருந்த மெத்தைக்குப் போடப்பட்டிருந்த மெல்லிய பட்டுறை மீது, மங்கல் நிறமான கஞ்சாப்பூக் கள் பின்னப்பட்டிருந்தன. அலுத்துப்போன நித்திரா தேவியின் கரங்களிலிருந்து நழுவி விழுந்த பூக்கள் போன்று அவை காட்சி யளித்தன. கட்டிலின் மேல் விதானத்தை, உயரமான தந்தக் குழாய்த்தூண்கள் தாங்கி

நின்றன. அவற்றின் மேல் ஒட்டகப் பட்சியின் இறகுகள் வெண்ணுரை போன்று கிளம்பி நின்றன. பச்சை நிற வெண்கலத்தில் செய்யப்பட்ட ஒரு இளநங்கையின் உருவச்சிலை, அழகிய முகம் பார்க்கும் கண்ணாடியொன்றைத் தன் கரங்களில் தாங்கி நின்றது. மேஜையின் மேல் விரிந்த ரத்தினக் கோப்பையொன்று வைக்கப்பட்டிருந்தது.

மாளிகைக்கு வெளியே நோக்கினான் இளவரசன். நிழல்போன்று தோன்றிய கணக்கற்ற கட்டிடங்களுக்கிடையே ஒரு நீர்க்குமிழி போன்று, தேவாலயத்தின் அரைவட்ட வடிவமான மாடி மண்டபம் காட்சியளித்தது. சோர்ந்துபோனகாவல்காரர்கள் அதற்கு முன் வாயிலில் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தனர். வெகு தூரத்தில் ஒரு பழத்தோட்டத்தில் வானம்பாடி இனிய கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. திறந்த ஜன்னல் வழியாகக் காற்றினூடே மலர் மணம் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. நெற்றி மீது விழுந்து கிடந்த தலைமயிரைக் கையால் பின் புறம் தள்ளினான். அங்கேயிருந்த வீணையொன்றைக் கையிலெடுத்து, அதன் தந்திகளைத் தன் மெல்லிய விரல்களால் ஸ்பரிசித்தான். இமைகள் மூடின. அவனுக்கு ஒரு விசேஷ மயக்கம் ஏற்

பட்டது. இதுகாறும் அழகின் மேன்மையை அவன் இவ்வளவு தூரம் ரசித்ததில்லை.

மணி பன்னிரண்டடித்தது. பணியாட்கள் உள்ளே வந்து அவனை மஞ்சத்தில் படுக்க வைத்தனர். சிறிது நேரத்தில் அவன் நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டான். தூங்கும் போது அவன் ஒரு கனக்கண்டான்:

நெசவுத் தொழிலாளிகள் மத்தியில் அவன் நின்று கொண்டிருந்தான். தறிகள் ஓலமிட்டுக் கொண்டிருந்தன. எலும்புந்தோலு மான நெசவுகாரர்களின் உருவங்கள் அவன் கண்ணில் பட்டன. பக்கத்தில் அவர்களுடைய குழந்தைகள் குந்திக்கொண்டிருந்தன. பஞ்சமும், பசியும், பிணியும் அங்கு காட்சியளித்தன. சில பெண்கள் ஒரு மூலையில் உட்கார்ந்து எதையோ தைத்துக் கொண்டிருந்தனர். எங்கும் ஒரே துர் நாற்றம் வீசிற்று. இளவரசன் ஒரு தறியின் பக்கத்தில் போய் நின்று கொண்டு கவனித்தான். நெசவுகாரனுக்குக் கோபம் உண்டாகி விட்டது. "நீயேன் என்னை இப்படிப் பார்க்கிறாய்? எசமானனுடைய ஒற்றனா நீ?" யென்று அவனைப் பார்த்துக் கேட்டான்.

"உன் எசமான் யார்?" என்றான் ராஜகுமாரன்.

"என் எசமானா? அவனும் என்னைப் போல ஒரு மனிதன்தான். ஆனால் ஒரே ஒரு வித்யாசம்—அவன் நல்ல ஆடைகளை அணி கின்றான்; எனக்கோ இந்தக் கந்தலைத் தவிர வேறு கதியில்லை, பசிக் கொடுமையால் நான் மெலிந்து வாடுகின்றேன்; அவன் அளவு மீறி உண்டு அவதிப்படுகின்றான்!" என்று அந்தத் தொழிலாளி அழுதுகொண்டே சொன்னான்.

"பூமியில் எல்லோருக்கும் சுதந்திர உரிமை யுண்டே, நீ யாருக்கும் அடிமை யல்லவே" என்றான் இளவரசன்.

"யுத்தத்தில் வலியார் எளியாரை அடி மைப்படுத்துகின்றனர்; சமாதான காலத்தில் செல்வந்தர் ஏழைகளை அடிமைகளாக்குகின்ற னர். உயிர் வாழ்வதற்காக நாம் உழைக்க வேண்டும். அவர்களோ, நாங்கள் சாவதற்காக அவ்வளவு குறைந்த கூலியைக் கொடுக்கிறார் கள். நாள்முழுதும் நாங்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்கின்றோம்; ஆனால் அவர்கள் பெட்டி யில் பணம் நிரம்புகிறது. எங்கள் குழந்தைகள் அகால மரணமெய்துகின்றன. நாங்கள் காத லிப்பவரது முகங்கள் கடுகடுக்கின்றன; தீய பார்வை பார்க்கின்றன. நாங்கள் முந்திரிப் பயிர் வளர்க்கிறோம். ஆனால் கனி பறித்துப் புசிப்பவர் வேறு மனிதர். நாங்கள் விதைக்

கின்றோம்; இருந்தாலும் எங்கள் குதிரில் தானியமில்லை. கண்ணால் காண முடியாத சங்கிலிகள் எங்களைப் பிணைத்து நிற்கின்றன. சுதந்திர மனிதர்கள்தாம் என்று பிறர் எங்களைச் சொல்லிக் கொண்டாலும் நாங்கள் அடிமைகள் தாம்" என்றான் அந்தத் தொழிலாளி.

"எல்லோர் விஷயமும் இப்படித்தானா?" என்று இளவரசன் கேட்டான்.

"ஆம். வாலிபரும் சரி, வயோதிகரும் சரி, பெண்களும் சரி; ஆண்களும் சரி; எல்லோரும் இதே நிலைமையில்தா னிருக்கின்றனர். வியாபாரிகள் எங்களைக் கசக்கிப் பிழிகிறார்கள்; அவர்கள் சொன்னபடி நாங்கள் செய்யவேண்டும். மதகுரு இந்தப்பக்கமாகத்தான் ஜபித்துக்கொண்டே செல்கின்றார் எனினும் எங்களைக் கவனிப்பார் யாருமில்லை. சூரியவொளி படமுடியாத இருளடைந்த எங்கள் சந்துகளில் மெல்ல வறுமை தனது பசிப் பார்வையுடன் அடியெடுத்து வைக்கிறது; அதைத் தொடர்ந்து வருகிறது பாவம். காலையில் நாங்கள் துன்பத்தின் கண்ணில்தான் விழிக்கின்றோம். இரவெல்லாம் எங்களோடு அவமானமும் அமர்ந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் உனக்கெதற்கு? நீ எங்களில்

ஒருவனல்லவே. உன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது,'' என்று சொல்லிவிட்டு அந்த ஏழைத் தொழிலாளி அந்தப்பக்கம் திரும்பி நெய்குழலைத் தெறித்தான். அந்தக் குழலில் தங்க இழை ஓடுவதை அரசிளங்குமரன் கண்டு ஆச்சரிய முற்றான். அவனைப் பெரும் பீதி பீடித்துக்கொண்டது. ''நீங்கள் நெய்யும் இந்த ஆடை எதற்கு?'' என்று கேட்டான்.

''அதையேன் நீ கேட்கிறாய்? இளவரசனுடைய பட்டாபிஷேக ஆடையல்லவா இது?'' என்றான் நெசவுகாரன்.

அவ்வளவுதான், இளவரசன் உரத்தபயங்கரக் கூக்குரலிட்டுக் கொண்டே தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டான். எல்லாம் கனவுதான் என்பது புலப்பட்டது. வானத்தில் பொன்னிறச் சந்திரன் தொங்கிக்கொண்டிருந்ததை ஜன்னல் வழியாகக் கண்டான்.

இளவரசன் மீண்டும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். அச்சமயம் இன்னொரு கனவு கண்டான்.

தான் ஒரு பெரியதோணியில் படுத்திருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. நூறு அடிமைகள் தண்டு வலித்து அதைச் செலுத்தினர். இளவரசன் பக்கத்தில் அதன் எசமானன் ஒரு விரிப்பின்மீது அமர்ந்திருந்தான்.

கருங்காலிபோன்ற கருமை நிறம். தலையில் சிவப்புப் பட்டுத் தலைப்பாகை, காதில் வெள்ளிக்கடுக்கன்கள் தொங்கின. அவன் கைகளில் தந்தத்தராசுகள் இருந்தன. தோணியைச் செலுத்திய அடிமைகள் இடுப்பில் மட்டுமே ஒரு முரட்டுத்துணி இருந்தது. ஒவ்வொருவனும் அவனை அடுத்து நின்றவனுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தான். கடுமையான வெய்யில் அவர்கள்மீது காய்ந்தது. நீக்ரோக்கள் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்கு ஓடி அந்த அடிமைகளைச் சாட்டை வாறினால் அடித்தனர். அடிமைகள் கனத்த துடுப்புகளை வலித்துத் தோணியை ஓட்டினர்.

கடைசியாக, தோணி ஒரு சிறு வளைகுடாவை அடைந்தது. நங்கூரம் போட்டு, பாய்களை மடக்கினர். நீக்ரோக்கள் ஒரு பெரிய கயிற்று ஏணியைக்கொண்டு வந்தனர். அதில் பாரமான ஈயக்குண்டு கட்டப்பெற்றிருந்தது. இரு நுனிகளையும் தோணியின் மேல்தட்டிலிருந்த இரு பெரிய இரும்பு வளையங்களில் கட்டிவிட்டு, ஈயக்குண்டுடன் ஏணியைக் கடலில் வீசினார்கள். அடிமைகளில் மிகவும் இளைஞனாகவுள்ளவனைப் பிடித்து வந்து அவன் நாசித்துவாரங்களிலும், காதுகளிலும் மெழுகைவைத்து அடைத்தார்கள். அவன் இடுப்பில்

ஒரு பெரிய கல்லைக் கட்டினர். அவன் மிகவும் சோர்வுடன் அந்த ஏணி வழியாகக் கடலில் இறங்கி மறைந்துபோனுன். அவன் மூழ்கின இடத்தில் சில குமிழிகள் எழுந்தன. தோணியின் முன் பக்கத்தில் ஒரு மந்திரவாதி ஓயாமல் முரசறைந்துகொண்டிருந்தான். கொடிய சுரு மீன்களை வசியப்படுத்துவது அவன்வேலை.

சிறிது நேரஞ் சென்றதும், கீழே சென்ற நீக்ரோ கையிலொரு முத்துடன் மேலே ஏறி வந்தான். நீக்ரோக்கள் அதை அவனிடமிருந்து பறித்துக்கொண்டு, மீண்டும் தண்ணீருக்குள் அமிழ்த்திவிட்டனர். அடிமைகள் துடுப்புகளைப் பிடித்த பிடியுடனே தூங்கிப் போய்விட்டனர்.

பலமுறை அந்த அடிமை ஏணி வழியாகக் கீழே சென்று முத்துகளுடன் மேலெழும்பி வந்தான். தோணியின் சொந்தக்காரன் அந்த முத்துக்களை வாங்கி எடைபோட்டுப் பார்த்துவிட்டு ஒரு தோல் பைக்குள் போட்டுக்கொண்டான்.

இந்தக் காட்சிகளைக்கண்ட இளவரசன் ஏதோ பேசமுயன்ருன். ஆனுல் நாக்கு அசையவில்லை. உதடுகள் ஸ்தம்பித்துப்போய் விட்டன.

அந்த அடிமை கடைசிமுறையாகக் கடலி

விருந்து வெளி வந்தபோது கொண்டு வந்த முத்து அதிக எடையும் அழகும் உள்ளதாக விளங்கியது. பூரணச் சந்திரனையொத்த வடிவத்துடன் விடி வெள்ளியைவிட வெண்மையாகவுமிருந்தது. ஆனால் அவன் முகம் வெளிறிப்போய்விட்டது. தோணியில் அவன் அப்படியே விழுந்துவிட்டான். காதுகளிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. சிறிது நேரம் அவன் துடித்தான்; பிறகு சிறிதும் அசைவற்ற இறுதி நிலையை எய்திவிட்டான். நீக்ரோக்கள் பிணத்தைக் கடலில் தூக்கியெறிந்தனர்.

தோணிக்காரன் சிரித்தான். கடைசியாகக் கிடைத்த முத்தைவாங்கி நெற்றியோடு வைத்து வணங்கினான். "இந்த முத்து நமது இளவரசனுடைய செங்கோலில் வைக்கப்படவேண்டும்" என்று சொல்லிவிட்டு, நங்கூரத்தை வெளியிலெடுக்கும்படி உத்தரவிட்டான். இதைச் செவியுற்றதும் இளவரசன் திகிலுடன் உரத்து கூவினான். விழித்தபொழுது காலையின் நீண்ட விரல்கள் மங்கிவரும் நட்சத்திரங்களைப் பிடித்துக் கொண்டிருக்கக் கண்டான்.

இளவரசன் தூக்கத்திலாழ்ந்தான். அப்பொழுது மற்றொரு கனாக்கண்டான்.

இருளடைந்த காட்டினூடே அலைந்து திரி

வதாகத் தோன்றிற்று. விசித்திரமான கனி கள் மரங்களில் தொங்கிக் கொண்டிருந்தன. அழகான ஆனல் விஷங்கொண்ட மலர்கள் காணப்பட்டன. பாதையில் விஷப்பாம்புகள் சீறின. மின்வர்ணக் கிளிகள் கீச்சிட்டுக் கொண்டு மரத்திற்கு மரம் தாவின. கொதித்துக் கொண்டிருந்த சேற்றில் பெரிய ஆமைகள் உறங்கிக்கொண்டிருந்தன. மரங்கள் முழுவதும் மந்திகளும் மயில்களும் நிரம்பியிருந்தன.

அவன் போய்க்கொண்டே யிருந்தான். கடைசி எல்லையும் வந்தது. அங்கே வரண்டு போன ஒரு ஆற்றில் கூட்டங் கூட்டமாக மனி தர் கஷ்டப்பட்டு வேலைசெய்து கொண்டிருந் தனர். குன்றின்மேல் எறும்புக்கூட்டம் மாதிரி மொய்த்தனர். பூமியில் ஆழமான குழிகள் தோண்டி, பாதாளத்துக்குச் சென்றனர். சிலர் கோடாரி கொண்டு பாறைகளைப் பிளந்தனர்; வேறு சிலர் மணலை சலித்துக் கொண்டிருந் தனர். கத்தாழைச்செடியை வேரோடு பிடுங்கிக் கிழித்தனர் சிலர்; நீலநிற மலர்களைக் காலால் மிதித்துத் துவைத்தனர். யாரும் சோம்பேறி யாக நிற்கவில்லை.

இருட்டான குகையில் மரணமும் பேரா சைப் பேயும் மறைந்து நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. "நான் ரொம்

பத் தளர்ச்சியுற்று விட்டேன். இவர்களில் மூன்றிலொரு பங்கினரை எனக்குக் கொடுத்து விடு. நான் போகிறேன்" என்று மரணம் சொல்லிற்று. "முடியாது. அவர்கள் எனது ஊழியர்கள் அல்லவா?" என்று தலையை ஆட்டியது பேராசை,

"உன் கையில் என்ன வைத்திருக்கிறாய்?" என்றது மரணம்.

"என்னிடம் மூன்று தானிய மணிகள் இருக்கின்றன. உனக்கென்ன வேண்டும்?" என்றது பேராசை.

"அவற்றில் ஒன்றை எனக்குக் கொடு. ஒன்றுமட்டும் கொடுத்தால் போதும். அதை என் தோட்டத்தில் ஊன்றுகிறேன்" என்றது மரணம்.

"நான் ஒன்றும் தரமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே பேராசை தனது கையை மடிக்குள்ளே மறைத்துக் கொண்டது.

சிரித்துக்கொண்டே மரணம் ஒரு கோப்பையை எடுத்து ஒரு மடுவில் அமுக்கியது. அந்தக் கோப்பையிலிருந்து குளிர்சுரம் வெளியே கிளம்பியது. அவ்வளவுதான்; அந்த மனிதர் தொகுதியில் மூன்றிலொரு பகுதியினர் மரணத்துக்குப் பலியாயினர். குளிர்ந்த பனிப்படலம் அந்தக் குளிர்சுரத்தைத் தொடர்ந்தது,

நீர்ப்பாம்புகள் பல அதனருகே ஊர்ந்து சென்றன.

பேராசை இந்தக் கோரக் காட்சியைக் கண்டு மார்பிலடித்துக் கொண்டு அழுதது. "எனது ஊழியர்களில் மூன்றிலொரு பங்கினரைக்கொன்ருயே! இங்கு நிற்காதே, ஓடிவிடு" என்று அலறிற்று, "தார்த்தாரி தேசத்து மலைகளில் போர் நடக்கிறது, இருபக்கத்து மன்னர்களும் உன்னை விருந்துக்கு அழைக்கிருர்கள், இங்கு உனக்கு என்னவேலை? ஓடிவிடு. இனி இந்தப்பக்கம் தலை காட்டாதே."

"ஒரு தானிய மணி தரும்வரை நான் போகமாட்டேன்" என்றது மரணம். பேராசை தன்கையை இறுகமூடிக்கொண்டு பல்லைக்கடித்தது. "நான் உனக்கு ஒன்றும் தரப்போவதில்லை" என்று சாதித்தது.

மரணம் சிரித்துக்கொண்டே ஒரு கருங்கல்லை யெடுத்துக் காட்டில் எறிந்தது. காட்டுப் புதரிலிருந்து, நெருப்பாடை போர்த்திக் கொண்டு சுரம் வெளிப்பட்டது, மனிதக்கூட்டத்தில் புகுந்து ஒவ்வொருவராகத் தொட்டுக் கொண்டே சென்றது, சுரம் தொட்டவரெல்லாம் மடிந்துவிழுந்தனர், அது சென்ற பாதையில் புல் கரிந்து புகைந்தது.

பேராசை நடுங்கிக்கொண்டுத் தன் தலை

யில் விபூதியைப் போட்டுக் கொண்டது. "நீரொம்பவும் கொடியவன்; மகாகொடியவன். தூரக்கிழக்கில் (இந்தியாவில்) பஞ்சம் தாண்டவமாடுகிறது, சமர்க்கண்டிலுள்ள நீர் நிலைகள் வரண்டு போயின. எகிப்திலுள்ள நகர்களில் கொடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பாலைவனத்திலிருந்து வெட்டுக்கிளிகள் படையெடுத்து விட்டன; உன்னை விரும்பும் மனிதர்களிடம்போ, எனது வேலைக்காரர்களைச் சும்மா விடு" என்றது பேராசை.

"ஒரு தானிய மணி தரும்வரை நான் போகப் போவதில்லை" என்றது மரணம்.

"நான் ஒன்றும் தரமாட்டேன்" என்றது பேராசை.

மரணம் மீண்டும் சிரித்துக்கொண்டே சீட்டியடித்தது, ஒரு பெண் வானத்தில் பறந்தாள், அவள் நெற்றில் "பிளேக்" என்று எழுதியிருந்தது, அவளைச் சுற்றிக் கழுகுக் கூட்டம் வட்டமிட்டுவந்தது, அந்தமலைச்சாரல் முழுவதையும் தன் சிறகுகளால் அணைத்தாள், உயிருடன் ஒரு மனிதன்கூட மிஞ்சவில்லை.

பேராசை காட்டினூடே அலறிக்கொண்டு சென்றது. மரணம் தன் சிவப்புக் குதிரை மீதேறி, காற்றினும் கடுவேகத்தில் பறந்தது. மலையடிவாரத்தில் பயங்கரமான பிராணிகள்

பல வெளிவந்து உலாவின. ஓநாய்கள் மணல் வழியே மெல்ல நடந்து வந்தன.

"இங்கே வேலை செய்த மனிதர்கள் யார்? எதற்காக வேலைசெய்தனர்?" என்று கேட்டான் இளவரசன் அழுதுகொண்டே.

"ஒரு ராஜனுடைய கிரீடத்தில் வைப்பதற்காக மாணிக்கக் கற்களைத் தேடிக்கொண்டிருந்தனர்" என்று ஒருபதில் கிளம்பிற்று.

இளவரசன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பரதேசிபோல் உடையுடுத்திருந்த ஒருவன், கையில் ஒரு வெள்ளிக் கண்ணாடியுடன் நின்று கொண்டிருந்தான்.

"எந்த மன்னனுக்காக?" என்று கவலையுடன் கேட்டான் இளவரசன்.

"இந்தக் கண்ணாடியில் பார்த்துக் கண்டுகொள்" என்று நீட்டினான் பரதேசி.

கண்ணாடியில் நோக்கினான். தனது முகத்தையே அதில் கண்டு பெருங் கூக்குரலிட்டுக் கொண்டே விழித்தான் ராஜகுமாரன். அவன் அறைக்குள்ளே சூரியவொளி பாய்ந்துகொண்டிருந்தது. பக்கத்துத் தோட்டத்தில் நின்ற மரங்களில் பறவைகள் பாடிக் கொண்டிருந்தன.

மந்திரி பிரதானிகள் அவ்வமயம் அறைக்குள் நுழைந்து அரசனை வணங்கினர். பொன்

னுடையையும், கிரீடத்தையும், செங்கோலையும் எதிரே வைத்தனர். அவை அழகாகவே தோன்றின. அச்சமயம் அவன் கண்ட கனவு களும் ஞாபகத்துக்கு வந்தன. "இவற்றை நான் அணியப் போவதில்லை. அப்பால் எடுத் துச் செல்லுங்கள்" என்றான் பிரதானிகளிடம்.

பிரதானிகள் ஆச்சரியமுற்றனர். இளவர சன் கேலி செய்கிறானென்று சிலர் சிரித்த னர். ஆனால் அவன் மீண்டும் கடுமையாக வற் புறுத்திச் சொன்னான்: "இந்த சாமான்களை எடுத்துக்கொண்டு போங்கள். அவை என் கண்ணில் படக்கூடாது. இன்று எனது பட் டாபிஷேக தினமாக இருப்பினும், நான் அவற்றை அணியப் போவதில்லை. துன்பம் என்ற தறியில், துயரத்தின் வெண் கரங்களால் இந்த ஆடை நெய்யப்பட்டிருக்கிறது. மாணிக் கத்தின் இருதயத்தில் இரத்த மல்லவா இருக் கிறது? முத்தின் இருதயத்தில் மரணமல்லவா இருக்கிறது?" என்று பிறகு அவன் தான் கண்ட மூன்று கனாக்களையும் விவரித்தான்.

பிரதானிகள் இளவரசன் கூறியதைக் கேட்டு ஒருவருக்கொருவர் பார்த்துவிட்டு, "உண்மையாக நமது இளவரசனுக்குப் பைத் தியம் பிடித்துவிட்டது. கனா உண்மையான நிகழ்ச்சியா? அது வெறுங் கனவுதானே?

அதைப்பற்றி யாருங் கவலைகொள்ள வேண்டியதில்லை. நமக்காக உழைப்பவரது உயிரைப் பற்றி நமக்கேன் கவலை? கோதுமை விதைத்தவன் எந்த நிலையிலிருக்கின்றான் என்று பார்ப்பதுவரை நாம் ரொட்டியைச் சாப்பிடாமலிருப்பதா? முந்திரிச் சாராயம் இறக்குபவனைக் கண்டு பேசுவதுவரை ஒயினை சாப்பிடாமலிருப்பதா?" என்று சொல்லிக் கொண்டனர்.

அரண்மனைப் பொக்கிஷதார் இளவரசனைப் பார்த்து, "இந்த தகாத எண்ணங்களை அகற்றிவிடுமாறு வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அழகிய அங்கியை அணிந்து கிரீடத்தையும் சூட்டிக்கொள்ளுங்கள். இவற்றை அணியாவிட்டால் தாங்கள் ஒரு ராஜா என்பதை ஜனங்கள் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?" என்று கேட்டார்.

"நீர் சொல்வது உண்மைதானா? நான் ராஜாவின் உடையை அணியாவிட்டால் என்னை ஜனங்கள் தெரிந்துகொள்ள மாட்டார்களா?" என்று இளவரசன் கேட்டான்.

"ஆம். உண்மை அப்படித்தான்" என்று கூவினார் பொக்கிஷதார்.

"மன்னர்களைப் போன்ற மனிதர் இருப்பதாக நான் எண்ணியதுண்டு. நீர் சொல்வது

போலவும் இருக்கலாம். இருந்தாலும் நான் இந்த ஆடையை உடுத்தப் போவதில்லை; இந்தக் கிரீடத்தைத் தரிக்கப் போவதில்லை. அது மட்டுமல்ல, நான் இந்த அரண்மனைக்கு எப்படி வந்தேனே அப்படியே அதைவிட்டு வெளியே போகப் போகிறேன்" என்ருன் இளவரசன்.

எல்லோரையும் தன் அறையைவிட்டு வெளியேறச் சொல்லிவிட்டு ஒரு பணியாளை மட்டும் இளவரசன் நிறுத்திக்கொண்டான். சுத்தமான நீரில் குளித்துவிட்டு, தனது பழைய ஆடு மேய்க்கும் காலத்துத் தோலாடையை உடுத்திக்கொண்டு, ஆட்டிடையன் கோலையும் பிடித்துக்கொண்டு தனது அறையைவிட்டு வெளியேறினான். அவனேடுகூட வெளியேறிய பணியாள் "பிரபுவே, உமது ஆடையையும் செங்கோலையும் பார்க்கின்றேன்; ஆனல் உமது கிரீடம் எங்கே?" என்று கேட்டான். உடனே இளவரசன் படர்கொடி யொன்றை ஒடித்து வளையமாகச் செய்து தலையில் அணிந்து கொண்டான். பிரதானிகள் பெரிய மண்டபத்தில் இளவரசன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

"ஜனங்கள் தங்கள் அரசனை எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனல் நீர் அவர்கட்கு ஒரு

பிச்சைக்காரனைக் காண்பிக்கிறீர்" என்றனர் பிரபுக்கள். "நமது ராஜ்யத்திற்கு இவர் அவமானத்தை உண்டுபண்ணுகிறார். நமது எசமானாக இருக்கத் தகுந்தவரன்று" என்றனர் சிலர் கோபத்துடன். இளவரசன் அவர்கள் வார்த்தைக்குப் பதில் சொல்லாமல் அப்பால் சென்று, படிகளையும் வெண்கல வாயில்களையும் கடந்து குதிரை மீதேறி தேவாலயத்தை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான். அந்தப் பணியாளும் அவனைத் தொடர்ந்து சென்றான். "ராஜனுடைய விதூஷகன் தான் இதோ செல்கின்றார்" என்றனர் ஜனங்கள் சிரித்துக்கொண்டே. "அல்ல, அல்ல, நான்தான் ராஜா" என்று இளவரசன் குதிரையைச் சற்று நிறுத்திச் சொல்லிவிட்டு தான் கண்ட மூன்று கனவுகளையும் கூறினான்.

கூட்டத்திலிருந்து வெளியேவந்த ஒருவன் காரசாரமாகச் சொன்னான்: "செல்வந்தரின் போக வாழ்க்கையி லிருந்தே ஏழைகளுக்கு ஜீவனம் ஏற்படுகிறதென்பதை நீர் அறியீரா? உமது ஆடம்பர வாழ்க்கையே எங்கட்கு ஆதரவளிக்கிறது. உமது துன்மார்க்கம் எங்கட்கு உணவு தருகிறது. ஒருவனுக்கு உழைப்பது கசப்பான காரியந்தான்; ஆனால் எசமானன்

ஒருவன் இல்லாதிருப்பது அதைவிடக் கசப்பான காரியமாகும். கழுகுகள் எங்கட்கு உணவூட்டும் என்று நினைக்கிறீரா? வாங்குபவரிடம் இன்ன விலைக்கு வாங்கு என்றும், விற்பவரிடம் இன்ன விலைக்கு வில் என்றும் நீர் சொல்வீரா? நான், அப்படிச் செய்வீர் என்று நம்பவில்லை. அரண்மனைக்குத் திரும்பிப் போய், அலங்கார ஆடையணிந்து கொள்ளும். எங்களைப் பற்றியும், எங்கள் துயரத்தைப் பற்றியும் உமக்கேன் கவலை"

"ஏழைகளும் செல்வந்தர்களும் சகோதரர்கள் அல்லவா?" என்று கேட்டான் ராஜகுமாரன்.

"ஆம், செல்வந்தனுடைய பெயர் பணம் என்பது" என்றான் அந்த மனிதன். இளவரசனுடைய கண்களில் நீர் நிரம்பிற்று. ஜனக் கூட்டத்தினிடையே அவன் குதிரையைச் செலுத்தினான். அவனோடு சென்ற பணியாள் பயந்து அவனைவிட்டு விலகிச்சென்றான்.

இளவரசன் தேவாலயத்தின் வாயிலை அடைந்ததும், சிப்பாய்கள் தங்கள் ஆயுதங்களை உருவிப் பிடித்துக்கொண்டு, "இந்த வழியாக மன்னனைத் தவிர வேறு யாரும் உள்ளே புகக்கூடாது" என்று தடுத்தனர்.

"நான்தான் மன்னன்" என்று இள

வரசன் கோபத்துடன் சொல்லி அவர்களை விலக்கிக்கொண்டே உள்ளே புகுந்தான்.

வயது முதிர்ந்த மதகுரு இளவரசனைக் கண்டதும் தமதுசிங்காதனத்தைவிட்டெழுந்து எதிர்சென்று "மகனே, இது ராஜ உடை அல்லவே, உன்னை எந்தக்கிரீடத்தால் மணிமுடிசூட்டுவேன்! உன்கையில் எந்தச் செங்கோலைத் தருவேன்? இன்று உனக்கு ஒரு இன்பநாளாக இருக்க வேண்டுமேயன்றி இழிவுதரும் நாளாக இருக்கலாமோ?" என்று கேட்டார்.

"துன்பம் இயற்றியதை இன்பம் சூடலாமா? என்று இளவரசன் கேட்டுவிட்டுத் தனது மூன்று கனவுகளையும் குருவுக்குக் கூறினார்.

மதகுரு புருவத்தைச் சுளித்துக்கொண்டே பின் வருமாறு சொன்னார்: "மகனே, எனக்கு அதிக வயதாகிவிட்டது. இந்தப் பரந்த உலகத்தில் எத்தனையோ தீயகாரியங்கள் செய்யப் படுகின்றன. கொடிய திருடர்கள் மலைகளிலிருந்து இறங்கிவந்து சிறு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுபோய் மூர்சாதியினருக்கு விற்று விடுகின்றனர், ஒட்டகப்பிரயாணிகளை எதிர்பார்த்து சிங்கங்கள் மறைந்திருக்கின்றன.

மலைச்சாரலில் காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிக்கின்றன. நரிகள் குன்றுகளில் முந்திரிச்செடிகளை நாசப்படுத்துகின்றன. கடல் கொள்ளைக் கூட்டத்தினர் கடற்கரைப் பிரதேசங்களை அழிக்கின்றனர்; செம்படவர்களின் தோணிகளை எரித்து விடுகின்றனர்; அவர்கள் வலைகளைப் பிடுங்கிக்கொள்கின்றனர். உவர் பூமியில் குஷ்டரோகிகள் வசிக்கின்றனர் அவர்களது குடிசைகளுக்குப் பக்கத்தில் யாரும் போவதில்லை. பிச்சைக்காரர்கள் நகரங்களில் அலைந்துதிரிந்து நாய்களுடன் உண்கின்றனர். இவற்றையெல்லாம் நடவாமல் செய்ய உன்னால் இயலுமா. குஷ்டரோகியை உனது தோழனுகக்கொள்வாயா? பிச்சைக்காரனை உடன்வைத்து உண்பாயா? சிங்கமும் பன்றியும் நீ ஏவுவதைச் செய்யுமா? துன்பத்தை உண்டு பண்ணியவன், உன்னைவிடப் புத்திசாலி அல்லவா? ஆகையால் அரண்மனைக் குத்திரும்பிப்போய் சந்தோஷத்துடன் ராஜ உடைகளை அணிந்து ராஜனுக இரு. பொன் கிரீடத்தை உனக்குச் சூட்டுவேன். முத்துப் பதித்த செங்கோலை உன் கையில் தருவேன். இந்த பூபாரம் முழுவதையும் ஒருவனே சுமக்கமுடியாது. ஆகையால் நீ கண்ட கனவுகளைப்பற்றி இனிக் கவலை கொள்ளாதே; இந்த

உலகத்துத் துயரத்தை ஒரு இருதயம் மட்டும் சகித்துக் கொள்ள முடியாது.

"இந்த இடத்திலா' நீர் இப்படிப் பேசுகிறீர்?" என்று சொல்லிக்கொண்டே இளவரசன் மதகுருவைக் கடந்துசென்று பீடத்தின் மீதேறி கிறிஸ்துநாதரின் சிலேக்கு முன்னல் நின்ருன். அவனது இரு கரங்களிலும் தங்கக் கிண்ணங்கள் இருந்தன. ஒன்றில் மஞ்சள் நிற ஒயினும், மற்றதில் தெய்வீகத் தைலமுமிருந்தன. கிறிஸ்துநாதரின் சிலேமுன்பு மண்டியிட்டான். விளக்குகளின் பிரகாசம் அதிகரித்தது. வாசனேத் திரவியங்களின் புகை நீல நிற மாலேகள் போன்று சுருண்டு சுருண்டு மேல் நோக்கிச் சென்றது. இளவரசன் ஜபம் செய்யும் முறையில் தலே தாழ்த்தினேன். குரு மார்கள் அங்கிருந்து அப்பால் சென்றனர்.

வெளியிலிருந்து ஒரு பேரிரைச்சல் திடீரென்று கிளம்பிற்று. பிரபுக்கள் உருவிய வாள்களுடன் உள்ளே பிரவேசித்தனர். "கனவுகள் காணும் சொப்பன மனிதன் எங்கே? பிச்சைக் காரனேப்போல் உடையுடுத்தியுள்ள இளவரசன் எங்கே? நமது ராஜாங்கத்துக்கு இழிவை உண்டுபண்ணும் அந்தச் சிறுவன் எங்கே. அவன் நம்மை ஆளத்தகுதியற்றவனுக

இருப்பதால் அவனை வெட்டி விடுவோம்" என்று கதறினர்.

இளவரசன் மீண்டும் தலைகுனிந்து வணங்கினான். ஜபம் முடிந்ததும் எழுந்திருந்து, தன்னைச்சுற்றிலும் மிகுந்த துயரத்துடன் உற்று நோக்கினான்.

வர்ணம்பூசிய சாளரங்கள் வழியே சூரியனுடைய ஒளிக்கதிர்கள் அருவிபோல பாய்ந்தன. இளவரசனைச்சுற்றி ஜ்வலிக்கும் பொன்னுடைபோல் போர்த்தி நின்றன. அவனுக்கு சந்தோஷம் அளிப்பதற்காகத் தயாரிக்கப் பட்ட ஆடையையும்விட அது மிக அழகாக விளங்கிற்று. பட்டுப்போல் நின்ற பூஞ்செடி தளிர்த்து அழகிய மலர்களைப் புஷ்பித்தது. காய்ந்து நின்ற ரோஜாச் செடிகளில் மாணிக்கத்தையும் விடச் சிவப்பான மலர்கள் பூத்தன. தங்க நிற இலைகள் தோன்றின.

இளவரசன் ராஜ உடையுடன் அங்கே நின்றுகொண்டிருந்தான். மூலஸ்தானக் கதவுகள் படீரென்று திறந்துகொண்டன. உள்ளேயிருந்து ஒரு அற்புதமான மாயஜோதி பிரகாசித்தது. சுவர் மாடங்களில் இருந்த தேவபக்தர்களின் சிலைகள் அசைவதுபோல் தோன்றின. அழகிய ராஜ உடையுடன் இளவரசன் அவர்கள் முன்னே நின்றான். தேவாலய வாத்தியம்

இன்னிசை ஒலித்தது. குழல் வாத்தியக்காரர்கள் தம் வாத்தியங்களை ஊதினர். இளம் பாடகர்கள் பாடினர். கூடியிருந்த மக்கள் மிகுந்த பயபக்தியுடன் தரையில் முழங்காலிட்டுப் பணிந்தனர். பிரபுக்கள் தம் வாள்களை உறையில் சொருகிவிட்டு மரியாதை செலுத்தினர். மதகுருவின் முகம் வெளிறிற்று; கைகள் நடுங்கின. "என்னை விடவும் மேலான ஒருவன் உனக்கு முடிசூட்டி விட்டார்" என்று சொல்லிக்கொண்டே அவர் அடிபணிந்தார்.

மன்னன் பீடத்திலிருந்து இறங்கிவந்து ஜனக்கூட்ட வரிசைகளுக்கிடையே நடந்து தன் மாளிகையை அடைந்தான். யாரும் அவன் முகத்தைப் பார்க்கத் துணியவில்லை. ஏனெனில், அது தேவதூதனின் முகம்போல் பிரகாசித்தது.

Printed at Commercial Printing & Publishing House, G. T., Madras.

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - தொகுதிகள் - XVIII & XIX

தொகுதி - 18

சக்திவேல்

முதலிய கதைகள்

ஆசிரியர் :

'அகிலன்'

கதைகளின் பெயர்

1. சக்திவேல்
2. சரவியின் ஜாதகம்
3. சாவிலே வாழ்வு
4. நிலவொளியில்
5. தொண்டிக் குப்பன்
6. கோஷா
7. பெற்ற மனம்
8. சினிமா வண்டி
9. புயலுக்குப் பின்
10. ஏழைப் பிள்ளையார்
11. தாலிக் கயிறு
12. சிசுவின் குரல்
13. கடவுளின் பிரதிநிதி
14. கதையின் முடிவு
15. வழிப்போக்கன்
16. தாமரைப்பூ
17. தணியுமா?
18. மேக சஞ்சாரம்
19. நான்
20. காசு மரம்
21. அழகி
22. சுதந்திரப் பறவை
23. வஸந்த நினைவு

தொகுதி - 19

மோகினி

முதலிய கதைகள்

ஆசிரியை :

ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி

கதைகளின் பெயர்

1. மோகினி
2. பாக்குக்கலர் புடவை
3. ரேணுகா
4. கடைசி இரவு
5. ராணிப் பிங்களா
6. சித்ரா
7. குருடனின் தியாகம்
8. தெய்வச் செயல்
9. யமுனை சொன்ன கதை
10. அடிமையின் வஞ்சம்
11. சோக வாழ்க்கை
12. அணைந்த தீபம்
13. தோட்டக்காரன் பேத்தி
14. பழநியாண்டி
15. வஸந்த பஞ்சமி

இவ்வாசிரியையின்

வேறு நூல்கள்

(1) ஸத்யகலா நாவல்

(2) தங்கம்மாள் -

(3) அந்தகன் குழலோசை

— நாடகம்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை